# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 24] குரோதிஆண்டு மாசித்திங்கள் 10—3—65 [இத


திருபுவனத்தில்



ஸ்ரீ சரபமூர்த்தி

தருமையாதினக் குருமுதல்வர்



ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

# ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

எங்கும் இருக்கும்
அறிவுநீ ஏகமாய்
அங்கங் குணர்த்தும்
அறிவுநாம் - பொங்கு
மல்மறைத்தல் மாயை
மயக்கல் விகாரப்
பலமனைத்தும் கன்மமலம்
பார். (27)

ஆசிரியர்:-
வித்துவான்,
சோமசுந்தரத்தம்பிரான்சுவாமிகள்

துணையாசிரியர் :-
வித்துவான்,
சி. அருணைவடிவேல் முதலியார்

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 24 | 10-3-65 | இதழ் 4

## உட்பொருள்

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | தென்றல் வந்தது | ... 193 |
| 2 | ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளுரை | ... 198 |
| 3 | தொல்காப்பியச்சொல்லதிகார விளக்கக் கட்டுரைகள் | . 209 |
| 4 | தமிழ் கூறு நல்லுலகம் | ... 213 |
| 5 | தமிழகத்திருக்கோயில்கள் | 217 |
| 6 | சஹஸ்ராகமம் | ... 221 |
| 7 | சித்தாந்த வினாவிடை | ... 225 |
| 8 | சிவாகமத்தெளிவு | ... 229 |
| 9 | அமராபரணன் சீயகங்கன் | 236 |
| 10 | வளைகுளம் என்னும் வைப்புத் தலம் | ... 240 |
| 11 | செய்திகள் | .. 245 |
| 12 | எதிர்காலம் | ... 253 |

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 24 ] குரோதி - மாசி - 10—3—65 [ இதழ் 4

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

## தென்றல் வந்தது

இறைவன் படைத்த இனிய பொருள்களில் தென்றல் ஒன்று. இதனை, மாசில் வீணை, மாலை மதியம் முதலிய வைகளோடு சேர்த்து, 'வீசு தென்றல்' என்று அருளு கின்றார் அப்பர் பெருமானார். இதன் இனிமையை, மென் கால், இளங்கால், மந்த மாருதம் முதலிய பெயர்களால் வெளியிடுவர் புலவர். தென்றற் காற்றினை, பொதிய மலையின் கொடைப்பொருளாகக் கூறுதல் இலக்கிய மரபு. 'மலய மாருதம்' என்னும் பெயரின் பொருளும் இதுவே.

இளவேனிற் காலத்திற்கு முன்பே தோன்றி, இருவகை வேனிலிலும் உலாவும் இத்தென்றல், வேனிற்காலம் முழுவதும் உலகத்தை ஆட்சி செய்யும் இன்ப தேவனாகிய மன்மதன் ஏறித்திரியும் தேர் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, தென்றற்காலத்தில் அத்தேவனால், துன்புறுவோர் பலர்; இன்புறுவோர் பலர். எனினும், தென்றல் யாவராலும் இன்பப் பொருளாக எதிர்கொள்ளப்படுமேயன்றி, துன்பப் பொருளாக வெறுக்கப்படுதல் இல்லை. எனவே, தென்றல், சாலைகளிலும், சோலைகளிலும், தெருக்களிலும் மெல்லெனத் தவழ்ந்து சென்று பலரை இன்புறச்செய்யும். சமயாசாரியர் நால்வருள், 'வன்றொண்டர்' என்றும் 'தம்பிரான் தோழர்' என்றும் பெயர்பெற்ற சுந்தரமூர்த்தி நாயனாரிடம் இத் தென்றல் வந்ததனால் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை ஒருவரும் மறவார்.

திருவாரூர்த் தியாகேசனது திருவருள் வழியே பரவையாரை மணந்து திருவாரூரிலே இருந்த நம்பியாரூரர், தொண்டைநாட்டுத் தலங்களை வணங்கச்சென்று, கழுக்குன்றம், காஞ்சி, காளத்தி முதலியவைகளை வணங்கித் திருவொற்றியூரை அடைந்தார். அங்கு எழுத்தறியும் பெருமானை வணங்கச் சென்றபொழுது அப்பெருமானுக்குத் தொண்டு பூண்டிருந்த சங்கிலியாரைக்கண்டு முன்னைத் தொடர்பால் விருப்புற்றுப் பெருமானை வேண்டி அவனது அருள்விளையாட்டின்படி, 'திருவொற்றியூரை விட்டு நீங்குவதில்லை' என்று சூள் உரைத்து, அவ்வம்மையாரை மணந்து அத்தலத்திலேயே நெடுநாள் இருந்தார். அவ்வாறிருக்கும் நாளில் ஒருநாள் தென்றல் வந்து மெல்லென வீசிற்று.

தென்றல், பிறந்தது பொதியமலையில். பொதியம் தமிழ்ப் பொதியம்; சிவபிரானுக்கு இனியதுங்கூட. தென்றல், தவழ்ந்தது பொதியமலையின் ஓங்கித் தழைத்து நெருங்கிய சந்தன மரச்சோலையில். ஆகவே, உள்ளத்தைக் குளிர்விக்கும் தமிழ் மணத்தையும், உடலைக் குளிர்விக்கும் சந்தன

மணத்தையுந்தான் தென்றற்காற்று உடையதாய் இருக்கும். இன்னும், அறவோராகிய அகத்திய முனிவரது மலையில் தோன்றிய அதனிடம்' அறந்தான் உளதாகுமன்றி, மறம் உண்டாதற்கு வழியில்லை. எனினும், இத்தென்றலை மற முடையதாகப் பழிப்போர் எத்துணைப்பேர்! ஏன், நம்பி யாரூரரே ஒரு முறை,

"பிறந்த தெங்கள் பிரான்மல யத்திடைச்
சிறந்த ணைந்தது தெய்வநீர் நாட்டினில்
புறம்ப ணைத்தடம் பொங்கழல் வீசிட
மறம்ப யின்றதெங் கோதமிழ் மாருதம்!"

என்று சொல்லி வருந்தியதாகச் சேக்கிழார் பாடுகின்றார்.

பரவையாரது திருமணத்தின்போது வன்றொண்டரைத் திருவாரூரில் இவ்வாறு வாட்டமுறச் செய்த இத்தென்றல், இப்பொழுது திருவொற்றியூரில் அவர்முன் வந்தது. அதன் வருகை திருவாரூரில் வீதிவிடங்கப் பெருமான் கொண் டருளும் வேனில் விழாவிற்கு அவரை அழைக்க வந்தது போலத் தோன்றிற்று. அதனால், பூங்கோயில் அமர்ந்த புற்றிடங்கொண்ட பெருமானது நினைவு நாயனாரது திரு வுள்ளத்தில் மிக்கெழுந்தது. ஏழிசையாய், இசைப்பயனாய், இன்னமுதாய், தம்முடைய தோழனுமாய் நின்று, பரவை யாரையும் மணம்செய்வித்து ஆண்ட தம் ஆரூர்ப் பெரு மானை அணுகாதே நாள்பல கழித்த நம்பியாரூரர், அதற்கு மேலும் அவரைப் பிரிந்திருக்கலாற்றாதவராய், "பத்திமை யும் அடிமையையும் கைவிடுவான் பாவியேன்" என்று எடுத்து, "எத்தனைநாள் பிரிந்திருக்கேன், என் ஆரூர் இறைவனை" என்று திருப்பதிகம்பாடி இரங்கினார்.

சங்கிலியாருக்குச் செய்துதந்த சூளினால் திருவொற்றி யூரை நீங்கமாட்டாமையின், இவ்விரக்கத்திலே சிலநாள் கழிய ஒருநாள், 'யான் சூள் கடப்பது இறைவனை வணங் குதற்கன்றி வேறொன்றிற்கு அன்று ஆதலின், இதனை அவன் பொறுத்துக்கொள்வான்' என்று துணிந்து, திருக் கோயிலிற் சென்று இறைவனை வணங்கித் திருவாரூரை

நோக்கிப் புறப்பட்டுத் திருவொற்றியூர் எல்லையைக் கடந்தார். கடந்ததும் கண்ணொளி மறைய, 'எம்பெருமானே' என்று சொல்லி மூர்ச்சித்தார். பின்பு அடியவர் சிலர் வழி காட்ட வழிநடந்தார். திருமுல்லைவாயிலில் துயர்களைய வேண்டிப் பாடினர். திருவெண்பாக்கத்தில் பெருமான் கண்ணைத் தராது ஊன்றுகோல் கொடுக்க அதனைப்பெற்றுச் சென்றார். காஞ்சிபுரத்தில் குழைகம்பரைப் பணிந்து வேண்டி இடக்கண் கொடுத்தருளப் பெற்றார். பின்பு திருவாரூரை அடைந்து இறைவனை வற்புறுத்தி வேண்டி மற்றொரு கண்ணையும் பெற்றுப் பரவசமாய் விழுந்தார்; எழுந்தார்; ஆடினர்; பாடினர்; புற்றிடங்கொண்டிருந்த சிவக்கொழுந்தின் அருளாரமுதத்தை இரண்டு கண்களாலும் பருகினர். பின்பு. பரவையார் கொண்டிருந்த ஊடலை இறைவனே தூதாகச் சென்று தீர்க்க, நள்ளிரவில் நம்பியாரூரர் பரவையார் திருமனைக்கு எழுந்தருளினர். அப்பொழுது பரிசனங்கள் பலரோடும் வந்து பரவையார் மங்கலப் பொருள்களுடன் ஆளுடைய நம்பிகளை எதிர்கொண்டார். அவ்வமையம் எல்லா நிகழ்ச்சிகட்குங் காரணமாய்த் திருவொற்றியூரில் வந்த தென்றலை மீள இவ்விடத்தில் சேக்கிழார் மறவாது நினைவூட்டும் பகுதி பன்முறை ஓதியுணர்ந்து இன்புறுதற்கு உரியதாகும்.

"முன்துயில் உணர்ந்து சூழ்ந்த
பரிசனம் ஒருங்கு மொய்ப்ப
மின்திகழ் பொலம்பூ மாரி
விண்ணவர் பொழிந்து வாழ்த்த
மன்றல்செய் மதுர கீத
சீகரங் கொண்டு மந்தத்
தென்றலும் எதிர்கொண் டெய்தும்
சேவகம் முன்பு காட்ட"

என்பது அவ்வழகிய திருப்பாடல். பரிசனங்கள் செய்த பணிகளோடு தென்றலும் பணிசெய்தது என்பதற்கு, "சேவகம் முன்பு காட்ட" என்றாராயினும், 'இச்செயலை

எல்லாம் செய்து முடித்த தனது வீரத்தையும் சிறிது காட்டிற்று தென்றல்' என்ற நயம் உணர்ந்து மகிழத்தக்கது.

இவ்வாறு நம்பியாரூரர் அரிதிற் சென்று ஆரூரரை வணங்கியது, 'பங்குனி உத்திரத் திருவிழா' என்பது மரபு. அதுவே, இப்போழுது நிகழ இருப்பது. பங்குனி உத்திர விழா, திருவாரூர், காஞ்சி, திருமயிலை இவைகட்குச் சிறப்பாக உரிய விழாவாகும். திருவோற்றியூர்க்கும் உரியது என்பது அறியப்படுகின்றது தருமையாதீனத் திருக்கோயில்களில் வைத்தீஸ்வரன்கோயில், திருபுவனம், பேரளம் ஆகிய திருக்கோயில்களிலும் இவ்விழா நிகழ்கிறது. "பங்குனி உத்திரநாள் - ஒலிவிழாக் காணுதே போதியோ பூம்பாவாய்" என்று திருஞானசம்பந்தரும் அருளிச்செய்தார்.

நம்பியாரூரர் முன் வந்த தேன்றல் நம்முன்பும் வந்தது என்று கூறலாம். ஆனால், அவருக்கு இருந்த தடைபோல நம்மனோர்க்கு யாதோரு தடையும் இல்லை. ஆதலின், அல்லற்படாமலே ஆண்டவனது திருவருள் துணைப்பற்றிச் சென்று பங்குனி உத்திரநாள் ஒலிவிழாக் கண்டு, உள்ளத்து உன்னிய யாவும் ஒருங்கேய்தப்பேறுவோமாக

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sivalogathiagarajaswami Devasthanam, Achalpuram.

இன்று திருவெண்ணீற்றுமை அம்பாள் சமேத ஸ்ரீசிவலோகத் தியாகராஜசுவாமியைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றேன். இவ்வாலயம் சுத்தமாகவும், அழகாகவும் அமையப்பெற்றுள்ளது. இவ் வாலய சூப்பிரண்டெண்டும், இதர சிப்பந்திகளும் ஆலயத்தை நன்முறையில் நடாத்தியும், ஆலயத்துக்கு வரும் அன்பர்கட்குத் தக்கபடி உபசரித்து தரிசனம்செய்து வைக்கிறார்கள். இவ்வாலயத்தின் மூர்த்திகளும் சுற்றுப்புறங்களும் மிகவும் சுத்தமாகவைத்திருப்பதைக்கண்டு மனம் மகிழ்கின்றேன். இதன் பெருமை தருமை ஆதீனகர்த்தர் அவர்களுக்கே சார்ந்தது.

(Sd) வைத்தியபூபதி Dr. P. E. Shanmugasundaram,
M. I. H. & Biochemist, M. H. D. S. P. I. M. S. H. P. B. T. M.
192. C. 8. Gandhi Road, CHITTOOR.

உ

குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய

# அருளுரை

## குரு தரிசனம்

**கண்டேன்; இப் பாசம் கழிந்தேன் அமுதைமுகந்**
**துண்டேன்; சுகானந்தத் துள்ளிருந்தேன்—வண்டிமிர்காத்**
**தேனைப் பொழிகமலைச் செங்கமலப் பொற்பாத**
**ஞானப்ர காசனையே நான்.**

— குருஞானசம்பந்தர்.

அறிவுடையதாய், பெரிதாய், தோற்றம் ஈறுகள் இல்லாததாய் உள்ள உயிர், செம்பிற் களிம்புபோலத் தன்னை இயற்கையிலேயே பற்றியுள்ள ஆணவ மலத்தால் மறைக்கப்பட்டு, அறிவில்லாததாயும், அணுவாயும், பிறந்தும் இறந்தும் உழல்வதாயும் காணப்படுகின்றது. மகத்தாய் உள்ள உயிருக்கு அணுத் தன்மையைத் தருதல்பற்றியே, சகஜமலமாகிய மூலமலம், 'ஆணவம்' என்னும் பெயரைப் பெற்றது. இங்ஙனம் பெருமையை உடையதாகிய உயிர், ஆணவமலங் காரணமாகச் சிறுமை எய்திய காரணத்தால், முதற்கண், பேரின்பத்தை விரும்பாது சிற்றின்பத்தையே விரும்புகின்றது.

உயிர்களுக்குச் சிற்றின்பம், ஐம்பொறி வழியாக வரும் ஐம்புலன்களால் ஆகின்றது. ஒவ்வொரு புலனும் ஒவ்வொரு வகையாய்த் தோன்றுவதால், ஐவகை இன்பத்தையும் உயிர் அவாவுகின்றது. அதனால், உயிராகிய ஒன்றை, புலன்களாகிய ஐந்தும் தனித்தனியே தமக்கேற்ற பொறிவழியாக ஈர்க்கின்றன.

ஆகவே, உயிர் ஒருகணமும் நிலைத்து நிற்க இயலாது, அல்லற் பட்டு அலைகின்றது. இத் துன்ப நிலையை நம் சமயாசாரியர்கள் பலவிடங்களில் பலபடியாக எடுத்து விளக்குகின்றார்கள்.

"எறும்பிடை நாங்கூ ழெனப்புல னால்அரிப் புண்டலந்த
வெறுந்தமி யேனை விடுதிகண்டாய்"

"ஆனை வெம்போரிற் குறுந்தூ றெனப்புல னால்அலைப்புண்
டேனை எந்தாய்விட் டிடுதிகண்டாய்"

என்பன மாணிக்கவாசகரது மணிமொழிகள். பல எறும்புகளின் கூட்டத்திடையே அகப்பட்ட ஒரு நாங்கூழ்ப் புழுவும், யானைகள் ஒன்றோடொன்று எதிர்த்துப் போர் செய்யுமிடத்தில் அவற்றினது காலின்கீழ் அகப்பட்டுக்கொண்ட சிறு செடிகளும் என்ன பாடுபடும் என்பதனைச் சொல்லவேண்டா. அத்தன்மையதான பாட்டைப் படுகின்றதாம், ஐம்புலன்களிடையே அகப்பட்ட உயிர்! இவ்வாறு அருளிச்செய்கின்றார், ஆளுடைய அடிகள். ஆனால், நாம் இந்த ஐம்புலன்களிடையே வாழும் வாழ்க்கையை நல்ல இன்ப வாழ்க்கையாகவே எண்ணிக் களிக்கின்றோம்; இஃது ஆணவ மலத்தின் செயலேயாகும்.

"அழிவுடைத் தாய வாழ்க்கை ஐவரால் அலைக்கப் பட்டுக்
கழியிடைத் தோணி போன்றேன் கடவூர்வீ ரட்ட னீரே"

"வளைத்துநின் றைவர் கள்வர் வந்தெனை நடுக்கம் செய்யத்
தளைத்துவைத் துலையை ஏற்றித் தழலெரி மடுத்த நீரில்
திளைத்துநின் றாடு கின்ற ஆமைபோல் தெளிவி லாதேன்"

என்பன அப்பர் அருள்வாக்குக்கள். கழியில் உள்ள தோணி, கரையேறுவதுபோல அக்கரைக்கும் இக்கரைக்கும் அலைவதன்றி, என்றும் கரைசேர்தல் இல்லை. அதுபோல, ஐம்புலன்களில் கிடக்கும் உயிர், துன்பம் நீங்கி இன்பத்தைப் பெறுதல் இல்லை. இன்பம்போலத் தோன்றுவதும், உலை நீரில் இடப்பட்ட ஆமை, அந்த நீரில் மூழ்கி அடையும் இன்பம் போன்ற இன்பந்தான் என்கின்றார், அப்பர் பெருமானார்.

ஐம்புலன்களை யானைகளாகவும், வேடர்களாகவும் கூறுதல் பெருவழக்கு. அப்பர் ஓரிடத்தில் அவற்றின் கொடுமையை மற்றோர் அழகான உவமையால் விளக்குகின்றார்.

'ஒரு சின்னஞ் சிறிய குளம்; அதற்குத் துறைகளோ ஒன்பது. அதன் நீளம் ஒருமுழமும் அகலம் அரைமுழமுந்தான். ஆனால், அதில் ஐந்து முதலைகள் வாழ்கின்றன' என்பது அவ்வுவமை. இங்ஙனமாயின், அந்த ஒரு குளமே உள்ள ஊரில் உள்ளவர்கள், அக் குளத்தில் குளிப்பதும், தண்ணீர் எடுப்பதும் எவ்வாறு? எப்படியும் அவர்கள் அந்த முதலைகளுக்கு இரையாக வேண்டுவதுதான்.

" ஒருமுழம் உள்ள குட்டம் ஒன்பது துறையு டைத்தாய்
அரைமுழம் அதன் அகலம் அதனில்வாழ் முதலை ஐந்து "

என்பது காண்க.

" குட்டம் ஒருமுழம் உள்ளது அரைமுழம்
வட்டம் அமைந்ததோர் வாவியுள் வாழ்வன "

என்று திருமூலரும் அருளியுள்ளார்.

இந்த ஐம்புல வேடர்கள் அல்லது ஐம்புல யானைகள் - முதலைகள் - இவைகளிலிருந்து தப்புவது எவ்வாறு? ஐம்புலன்களுக்கும் வாயிலாகிய ஐம்பொறிகளையும் அறிவினால் அடக்குதல் வேண்டும். ஐம்பொறிகளாகிய பஞ்சேந்திரியங்களையும் அடக்கினவர்களை, 'ஜிதேந்திரியர்கள்' என்று அறிவுடையோர் பாராட்டுவர்.

" உரன்என்னும் தோட்டியான் ஓர்ஐந்துங் காப்பான்
வரன்என்னும் வைப்பிற்கோர் வித்து"

என்கின்றார் திருவள்ளுவர். ஐம்பொறிகளாகிய மதயானைகளை, 'அறிவு' என்கின்ற அங்குசத்தைக் கொண்டு அடக்கவேண்டும் என்பது அதன் பொருள். அறிவு - ஞானம்.

திருக்கேதாரத்தில், சிவனடியார்கள், இந்த ஐம்புலன்களாகிய மதயானைகள் ஐந்தையும், 'சிவஞானம்' என்னும் அங்குசத்தால் அடக்கி, இறைவனை இண்டை முதலிய மாலைகளைக் கொண்டு வழிபடுகின்றார்களாம்.

" தொண்டரஞ்சு களிறும் அடக்கிச் சுரும்பார்மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யுமிடம் என்பரால்

வண்டுபாட மயிலால மான்கன்று துள்ளவரிக்
கெண்டைபாயச் சுனைநீல மொட்டலருங் கேதாரமே ''

என்னும் ஞானசம்பந்தர் தேவாரத்தைக் காண்க.

'' அஞ்சினை ஒன்றிநின்று அலர்கொண்டடி சேர்வறியா
வஞ்சனை என்மனமேவைகி ''

எனச் சுந்தரரும் அருளுகின்றார்.

இவ்வாறு ஐம்பொறிகளையும், வேடர் என்றும், யானை என்றும், முதலை என்றும், அவைகளை அடக்கவேண்டும் என்றும் கூறினால், அவைகள் நமக்கு நேர் பகையானவையோ? என்ற வினா எழுகின்றது. அதற்கு, 'ஆம்' என்று விடை கூறினால். இந்தப் பகையான பொருள்கள் நம்மை எவ்வாறு அடைந்தன? அவைகள் நம்மை அடைந்தனவா? நாம் சென்று அவற்றை அடைந்தோமா? என்ற கேள்விகள் தொடர்ந்து எழுகின்றன, அவற்றிற்கு, 'அவைகளும் நம்மை வந்து அடையவில்லை; நாமும் அவைகளைச் சென்று அடையவில்லை; இறைவனே அவைகளை நமக்குப் படைத்துக் கொடுத்தான்' என்பதே விடையாகின்றது.

'' மெய்யுளே விளக்கை யேற்றி வேண்டள வுயரத் தூண்டி
உய்வதோர் உபாயம் பற்றி உகக்கின்றேன் உகவா வண்ணம்
ஐவரை அகத்தே வைத்தீர், அவர்களே வலியர் சாலச்;
செய்வதொன் றறிய மாட்டேன், திருப்புக லூர னீரே ''

என்னுந் திருப்பாடலுள் அப்பர் பெருமானார் ஐம்பொறிகளை ஆண்டவனே தம்பால் சேர்த்ததாக அருளிச் செய்தலைக் காண்கின்றோம்.

அங்ஙனமாயின், 'இரக்கமே வடிவமாய இறைவன், இந்தக் கொடிய பொருள்களை உயிர்களுக்குச் சேர்ப்பித்தது ஏன்? என்னும் வினா, அதன் பின்னே உண்டாகின்றது.

ஐம்பொறிகளாவன, மெய் வாய் கண் மூக்குச் செவிகள். இவை உயிர்கட்கு நேர் பகைப்பொருள்கள் அல்ல. பிற மதங்கள் இவைகளை உயிர்கட்குத் தீங்கு பயப்பனவாகவே கூறினும், சைவ சித்தாந்தம், இவைகளை, உயிர்கட்கு நன்மை பயப்பனவாகவே கூறுகின்றது. மெய், வாய், கண், மூக்கு, செவி இவைகளில்

ஒன்று இல்லாத பொழுதும், அதனால் உண்டாகும் அறிவு உயிருக்கு இல்லையாகிவிடுகின்றது. ஐந்துமே இல்லை என்றால், எந்த அறிவு உயிருக்கு உளதாகும்? ஐம்பொறிகளும் அடங்கி விட்டால், உயிர் அறிவற்ற சடப் பொருள் போலக் கிடக்க வேண்டுவதுதான். இதனை அன்றாடம் நமக்கு உண்டாகின்ற உறக்க நிலையில் நன்கு உணர்கின்றோம்.

உறக்கத்தில் கொடிய பாம்பு அணுகுவதையும் உயிர் அறிவ தில்லை. ஐம்பொறிகள் இல்லாவிடின், உயிர் எப்பொழுதும் அவ்வாறே கிடக்கவேண்டுவதுதான். விழிப்பு வரும்பொழுதே உயிர் அறிவைப் பெறுகிறது. ஆதலின், ஐம்பொறிகள் சேர்ந்த பொழுதுதான் உயிர் அறிவுடையதாய் விளங்கும். ஆகவே' ஐம்பொறிகள் உயிர்கட்குத் தீங்கு பயப்பன அல்ல; நன்மை பயப்பனவேயாம். அது பற்றியே கருணையாளனாகிய இறைவன், இருளிற் கிடப்பவனுக்கு, இரக்கமுடைய ஒருவன் விளக்கைக் கொடுத்தது போல, ஆணவ மலத்தால் மறைக்கப்பட்டு, அறிவே இல்லாது சடம் போலக் கிடந்த உயிருக்கு, இவ் ஐம்பொறிகளை யும், மற்றும் பல கருவிகளையும் படைத்துக்கொடுத்தான். இக் கருவிகளே, 'முப்பத்தாறு' என்றும், 'தொண்ணூற்றாறு' என்றும் சொல்லப்படும் தத்துவ, தாத்துவிகங்களாகும். இவை அனைத்தும் மாயையின் காரியங்கள். ஆணவமாகிய இருள் போய்விட்டால், விளக்காகிய இக்கருவிகளும் தேவைப்படாமல், நீங்கிவிடும். இதனை, உமாபதி சிவாசாரியார்,

"விடிவா மளவும் விளக்கனைய மாயை
வடிவாதி கன்மத்து வந்து"

என்று திருவருட்பயனில் கூறியுள்ளார். ஆகவே, ஐம்பொறிகளை இறைவன் உயிர்கட்குச் சேர்ப்பித்தது, அவற்றின் நன்மைக் காகவே யன்றித் தீமைக்காக அன்று என்பது விளங்கும்.

அங்ஙனமாயின், மேற்கூறியவாறு, ஐம்பொறிகளை வேடர் கள் என்றும், யானைகள் என்றும், முதலைகள் என்றும் சைவ சமயாசாரியர்களும் அருளிச்செய்தது என்னை என்று கேட்கலாம். ஐம்பொறிகள் தாமே இயங்குவன அல்ல. ஆதலின், அவை உயிர்களுக்குக் கருவியாகக் கொடுக்கப்பட்டனவன்றித் தலைமை யாகக் கொடுக்கப்பட்டன அல்ல. அதனால், அவை நன்மையைத்

தருவதும், தீமையைத் தருவதும் அவற்றை ஆளுகின்ற உயிரின் தன்மையைப் பொறுத்ததேயாகும்.

கருவிகளில் சில, நன்மைக்கும் ஆகும்; தீமைக்கும் ஆகும். அவைகளைத் தீமைக்கு ஆகாமல், நன்மைக்கு ஆகச் செய்வது அவைகளைக் கையாள்வோரது கடமையாகும். அதுபோலவே, ஐம்பொறிகளை நல்ல நெறியிற் செலுத்தினால், அவை நன்மையைத் தரும்; தீய நெறியிற் செலுத்தினால், தீமையைத்தான் தரும். எனவே, பஞ்சேந்திரியங்களை அடக்குதல் என்பது, அவைகளைத் தீயநெறியிற் செல்லாமல் அடக்கி நல்ல நெறியிற் செலுத்தலேயன்றி, அடியோடு அழித்துவிடுவது அன்று

மெய் வாய் கண் மூக்குச் செவிகளை அடியோடு அழித்து விட்டால், முன் சொன்னபடி உயிரும் கெடவேண்டியதேயன்றி வேறில்லை. இதனைத் திருமூலர், தமது திருமந்திரத்துள்,

“ அஞ்சும் அடக்கடக் கென்பர் அறிவிலார்
அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கில்லை
அஞ்சும் அடக்கில் அசேதன மாமென்றிட்டு
அஞ்சும் அடக்கா அறிவறிந் தேனே ”

என்று அருளுகின்றார். இதில், “ அஞ்சும் அடக்கில் அசேதன மாம் ” என்றது, குறிக்கொளத் தக்கது. அசேதனம் - அறிவில்லாதது; சடம்.

யானைகளை அடக்கியாண்டால், அதனால், எவ்வளவோ பயன் கிடைக்கும்; அதுபோலவே, ஐம்பொறிகளை அடக்கியாண்டால், எத்துணையோ நன்மைகள் உண்டாகும். இது பற்றியே ஐம்பொறிகளை, அவற்றின் கொடுமையை விளக்க, வேடர் என்றும், முதலை என்றும் சிறுபான்மை கூறினாலும், யானை என்று கூறுவதே பெரும்பான்மையாக உள்ளது. இன்னும் திருமூலர், ஓரிடத்தில் ஐம்பொறிகளை, ‘ பாற்பசு ’ என்று புகழ்கின்றார்.

“ பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு;
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன;
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசுஐந்தும் பாலாய்ச் சொரியுமே ”

என்பது அவ்வழகிய திருமந்திரம்.

அஞ்ஞானத்தில் அழுந்தினோர், ஐம்பொறிகளை அடக்கியாள மாட்டாமல், அவைகளின்வழி அவைகளை வெறித்துத் திரிய விட்டு அல்லற்படுகின்றனர். அஞ்ஞானம் நீங்கி, மெய்ஞ்ஞானத்தைப் பெற்ற பெரியோர்கள், அவைகளை அடக்கி, நன்னெறியிற் செலுத்திப் பேரானந்தம் பெறுகின்றனர். அப்பர் பெருமானார், "கண்காள் காண்மின்களோ", "செவிகாள் கேண்மின்களோ", "மூக்கே நீ முரலாய்", "வாயே வாழ்த்து கண்டாய்", "நெஞ்சே நீ நினையாய்" என்று இவ்வாறு எல்லாக் கருவிகளையும் நன்கு செயற்படச் சொல்லுகின்றாரே யன்றி, அவைகளினது செயற்பாட்டைக் கெடுத்துவிடவில்லை. இச் செயற்பாடுகளால் அவர் அடைந்தது இணையிலா இன்பமே யன்றித் துன்பம் அன்று.

ஐம்பொறிகளில் முதன்மையானது கண். ஏனெனில், ஒரு பொருளை கண் தவிர வேறு எந்தப் பொறிகளால் அறிந்தாலும், அது அறிந்ததாகத் தோன்றுவதில்லை. அதனால், ஐம்புலன்களிலும் காட்சியே சிறப்புடையதாகின்றது. ஆகவே, கண்களை நல்ல பொருள்களையே காணச் செய்தல் வேண்டும். காணும் பொழுதும் நல்ல கருத்தோடே காணுதல் வேண்டும். நாவுக்கரசர் திருவையாற்றில் சராசரங்கள் யாவும் ஆணும் பெண்ணுமாய் இணைந்து வருவதைக் கண்டார்; அவைகளை எவ்வாறு கண்டார்? சிவமும் சத்தியுமாய்க் கண்டார். அக்காட்சியால், கண்டறியாத இன்பத்தைக் கண்டார்.

"காதல் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப் பாதம் கண்டறியாதன கண்டேன்"

என்பது, அவர் அக்காட்சியை விளக்கும் பகுதி.

சுந்தரர், ஐந்து பேரறிவும் கண்களே கொள்ளும்படி கண்டார். எதனை? இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த எல்லையில் தனிப் பெருங் கூத்தினை. அப்பொழுது, கரணங்கள் நான்கும் சிந்தையேயாயின. குணம் ஒரு மூன்றும் திருந்து சாத்துவிகமேயாயின. அதனால், அந்த எல்லையில் தனிப்பெருங் கூத்தின் வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

நான்முகன், தான் படைத்த திலோத்தமையினிடத்து அவள் வடிவழகைக் கண்டான்; ஞானசம்பந்தர் தாம் படைத்த பூம்பாவையினிடம், கண்ணுதற் பெருமானது கருணை வெள்ளத்தைக் கண்டார். ஞானசம்பந்தர் கண்டதுபோலக் காணுதற்கு ஊனக்கண் மட்டும் போதாது; ஞானக்கண்ணும் வேண்டும். ஊனக்கண், ஐம்பொறிகளில் ஒன்று. ஞானக்கண் முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்தது. அஃது எவ்வாறு கிடைக்கும்?

ஞானக்கண் கிடைப்பதற்கு, ஊனக்கண்ணால் முதலிலே ஒன்றைக் காணவேண்டும். அஃது எது? அதுதான் குரு வடிவம்-ஆசான் மூர்த்தி - ஆசிரியத் திருமேனி. ஆசான் மூர்த்தியின் அருட்டிரு நோக்கம் பட்ட உடன், பாசம், சூரியன்முன் இருள் போலக் கெட்டொழியும்; ஞானம் பிரகாசிக்கும். அஞ்ஞானமாகிய பாசமே ஐம்பொறிகளைத் தம் இச்சைப்படி திரியவிட்டு, அல்லற்படுத்துவது என்றும், ஞானமே அவைகளை அடக்கி நம் இச்சைவழி நடக்கச் செய்து இன்பத்தை அளிப்பது என்றும் முன்னர்க் கண்டோம்.

குருதரிசனத்தால் பாசம் அற்றொழியவே, துன்பமும் அற்றொழியும். பாசம் விலகினால் சிவம் பிரகாசிக்கும். சிவம் பிரகாசிக்கவே சிவானந்தம் மேலிடும். அப்பொழுது, அதனுள் அழுந்தியிருக்கும் நிலை உளதாகும்.

சமயாசாரியர் போன்ற ஒரு சிலருக்கு இறைவன் தானே முன்னின்று பாசத்தை நீக்குவான். ஆனால் பலருக்கும் அவன் ஆசான் மூர்த்தி வாயிலாகவே பாசத்தைநீக்குகின்றான். ஆதலின், குருதரிசனத்தாலேயே பாசம் நீங்கிச் சிவம் பிரகாசித்துச் சிவானந்தத்தை அடைதல் உண்டாகும்.

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த"

என்பது சிவஞானபோதம்.

எங்கள் ஆதி பரமாசாரிய மூர்த்தியாராகிய ஸ்ரீ குருஞானசம்பந்தர், தாம் அனுபவத்தில் கண்ட குருதரிசனத்தின் பயனை,

ஆனந்த மேலீட்டில் எடுத்தருளிச்செய்த திருப்பாடலே, முதலில் கொடுக்கப்பட்டது.

அத்திருப்பாடலில் அவர்கள், முதலில் "கண்டேன்" என்னும் சொல்லைக் களிப்போடு அருளுகின்றார்கள். எதை அல்ல யாரை என்ற கேள்விக்கு விடை இறுதியில்தான் அவர்கள் அருளுகின்றார்கள். ஆனால், அக் காட்சியின் பயனையே இடையில் தெளிவாகக் கூறுகிறார்கள். என்றாலும், நாம் அவர்கள் கண்டது யாரை என்பதை முதலில் தெரிந்துகொள்ளுதல் வேண்டும். அப்பாடலின் முடிவில் அவர்கள், "ஞானப்ரகாசனையே" என்கிறார்கள். ஞானப்பிரகாசரது பெருமையை அவர்கள் விரிக்கின்றார்கள். ஞானப்ரகாசர், கமலை ஞானப்ரகாசர். கமலை என்பது திருமகளுக்குப் பெயர். அவள் வழிபட்ட காரணத்தால், திருவாரூருக்கும் அப்பெயர் உண்டாயிற்று. இதனால், திருவாரூரை, 'செல்வத் திருவாரூர்' என்று கூறுதலும் உண்டு. தியாகேசரும், செல்வத்தியாகேசரே.

ஞானப்ரகாசரது கமலையை, குருஞானசம்பந்தர், "வண்டிமிர்காத் தேனைப் பொழி கமலை' என்று சிறப்பிக்கிறார்கள். திருவாரூரில் உள்ள வண்டுகள் ஒலிக்கும் பூஞ்சோலைகள், வருபவருக்கு நிழல் தருவதுமட்டும் அன்று; தேனையும் பொழிந்து தருகின்றனவாம். மாணுக்கர் புடைசூழ இருக்கின்ற தம் ஞானசிரியராகிய ஞானப்ரகாசர், தம்மை அடைந்த மாணுக்கர்க்கு, ஞானத்தைப் பொழிந்து தருதலைக் குறிப்பாகக் காட்டுவதற்கே, கமலையை இவ்வாறு சிறப்பித்தருளினர்.

குரு தரிசனத்தின் பயன், திருவடி தீட்சைபெறுதலே, அதனை அவர்கள் பெற்ற காரணத்தால், அவரது பாதங்களை, 'பொற்பாதம் - கமலப் பொற்பாதம் - செங்கமலப் பொற்பாதம்' என்று அருமையாகப் பாராட்டி அருளுகின்றார்கள். அவைகளைப் பெற்றதனால் விளைந்தன யாவை? பாசப் பிணி நீங்கிற்று; சிவமாகிய அமுதம் கிடைத்தது; அதனை மூகந்து பேரானந்தத்துள் மூழ்கியிருக்கும் நிலை உண்டாயிற்று. ஆகவே, அந்தக் களிப்பின் மிகுதியால், "கண்டேன்; இப்பாசங் கழிந்தேன்; அமுதை மூகந்து உண்டேன்; சுகானந்தத்துள்ளிருந்தேன்",

என்று பாடுகிறார்கள். தாம் பெற்ற இவ்வின்பத்தை அனை வரும் பெறவே அவர்கள் தருமை ஞானபீடத்தை வழிவழியாக விளங்கவைத்துச் சென்றார்கள். அவர்களுக்குப் பின்பும்,

"ஊரிற் குறுகினேன் ஓர்மாத் திரையளவென்
பேரிற் குறுகினேன் பின்"

என்று, தருமையின் எல்லையை அணுகியபொழுதே சீவபோதம் நீங்கிச் சிவபோதம் மேலிட்டமையை, குமரகுருபரர் அருளிச் செய்துள்ளார். குருதரிசனத்தால் கிடைக்கும் இப்பெரும் பயனை அனைவரும் அறிந்து, அதனைப் பெற்று உய்வார்களாக.

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

Sri Vadhanyeswaraswamy Devasthanam, Vallalarkoil,
Mayuram Town.

चित्रं वटतरोर्मूले वृद्धाः शिष्याः गुरूर्युवा ।
गुरोस्तु मौनं व्याख्यानं शिष्यास्तु छिन्नसंशयाः ॥

Even the Holy Vrishata has joined the hand of the Lord's disciples here. We paid homage to this lovely temple this morning. The temple affords all the peace and blessing which man, stick up with the so called achievements of the modern age so badly needs.

The temple is maintained very well.

(Sd.) C. S. Ramachandran, I. C. S.
76. Kochi Estate,
New Delhi.

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagatesvaraswamy Devasthanam, Tirucadaiyur.

Through the grace of the Devine Mother we had the good fortune to have the Darsan of the Deities in this famous shrine. We feel here as if we are in the divine presence. The care and devotion with which the premises are kept in utmost tidiness and the services are conducted contribute very much to this holy atmosphere. I and those who came here to day for worship are extremely grateful to the Dharmapuram Sri la Sri Mahasannidhanam for maintaining this shrine in this superb manner.

(Sd.) S. Krishna Iyer,
Secretary,
26—12—64. Ramakrishna Mission, Madras

अरामालयः मया अतिसंतोषेण दृष्टः आलयाधिकारिणः सादरेणाहूय आलोकने आलयस्य सहायं कृतवन्तः अत्र पूजा आराधनादिकं अतिश्लाघ्यतया भवति एवमेव इतोऽप्याधिकतया प्रचलंतु अभिरामि सहित अमृतघटेश्वरानुग्रहेण इति आशीः ।

इति
नारायणस्मृतयः
पुष्पगिरि, विद्या नरसिंह भारति स्वामिनः
क्रोधि, माघ बहुल, ६ भानुः

அதிக சந்தோஷத்துடன் இவ்வாலயம் என்னால் தரிசிக்கப் பட்டது. ஆலய சிப்பந்திகள் அன்புடன் அழைத்து தரிசனம் செய்து வைத்தார்கள். இங்கு நடந்துவரும் பூஜைகள் ஆராதனைகள் மிகவும் சிலாக்யமாக இருந்து வருகிறது. இது மாதிரி இன்னும் அதிகமாக செய்து வரும்படி ஸ்ரீ அபிராமி அம்பாள் சமேத ஸ்ரீ அமிர்தகடேசுவரர் அருள்புரிக என்று எனது ஆசிகள்.

இப்படிக்கு,
நாராயண ஸ்மிருதய
வித்ய நரசிம்ஹ பாரதி ஸ்வாமிகள்
புஷ்பகிரி
21—2—65 குரோதி ஞு மாசி மீ கிருஷ்ண சஷ்டி ஞாயிறு.

# தொல்காப்பியச் சொல்லதிகார - - - விளக்கக் கட்டுரைகள்.

பண்டித வித்துவான், திரு. கு. சுந்தரமூர்த்தி

( மலர் 24, இதழ் 3, பக்கம் 156 இன் தொடர்ச்சி )

(ஆ) க. அசைநிலைகள் :

யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது என்ற ஏழும் அசைநிலைச் சொற்களாம் (31) மியா, இக, மோ, மதி, இகும். சின் என்ற ஆறும் முன்னிலைக்கண் வருகின்ற அசைச் சொற் களாம். அவற்றுள் இகும் சின் என்ற இரண்டும் தன்மையிலும் படர்க்கையிலும் வரும் (26, 27).

'மா' என்னும் சொல் வியங்கோளில் வரும்பொழுது அசை நிலையாய் வரும் (25). நன்னூலாரும் இந்நூற்பாவையே கொண்டெடுத்து மொழிவர்.

இயற்பெயர் முன்னர் வருகின்ற 'ஆர்' என்னும் சொல், பலர்பால் வினையைக் கொண்டு முடியும். அவ் ஆர் அசை நிலையாய் வருதலும் உண்டு (22, 23).

'அந்தில்' என்னும் சொல் தத்தம் குறிப்பில் பொருள் செய்யும் இடைச்சொல்லாய் ஆங்கு என்னும் பொருளில் வருவ தன்றி அசைநிலையாகவும் வரும் (19). இதனையே நன்னூலாரும்.

" அந்திலாங் கசைநிலை யிடப்பொரு ளவ்வே" (இடை. 18) எனக் கூறுதல் காண்க.

'ஏ,' 'குரை' ஆகிய இரண்டு இடைச்சொற்களும் அசை நிலையாய் வரும் (24). 'அம்ம' என்பது அசைநிலையாய் கேட்பாயாக என்னும் பொருளில் வரும். நன்னூலார் இதனை உரையசை என்பர் (28).

உ. உரையசைகள் :

'ஆங்க' என்னும் இடைச்சொல்லும், ஒப்புமை உணர்த்தாத 'போலும்' என்னும் இடைச்சொல்லும் உரையசைகளாக வரும் (29, 30).

உரையசைக்கும் அசைநிலைக்கும் உள்ள வேற்றுமை சிறிது பொருள் உணர்ந்துவனவற்றை உரையசை என்றும், பொருள் உணர்த்தாது அசைத்து நிற்பனவற்றை அசைநிலை யென்றும் வேற்றுமை காண்பர் நச்சினார்க்கினியர்.

௩. பிரிவில் அசைநிலைகள் :

ஆக, ஆகல் என்பது ஆகிய மூன்று இடைச்சொற்களும் அசைநிலையாகின்றபொழுது இரட்டித்து நிற்பனவாம். அங்ஙனம் இரட்டித்து நிற்கும் நிலையில் அவை பிரிவிலசைநிலை எனப் படும் (32).

(இ) இசைநிறையாய் வருவன :

ஏ, குரை ஆகிய இரண்டும் அசைநிலைகளாய் வருவதன்றி இசைநிறைத்தற்கும் வரும் (24). நன்னூலார் ஒடு, தெய்ய என்பனவும் இசைநிறையாய் வரும் என்பர் (இடை : 17).

இசைநிறைக்கும் அசைநிலைக்கும் உள்ள வேற்றுமை : இசை நிறைத்தற் பொருட்டு ஒரு சொல்லோடு ஒட்டி வருவதை இசை நிறையென்றும், ஒரு சொல்லோடு ஒட்டாது தனித்து வருவதை அசைநிலை யென்றும் வேற்றுமை காண்பர் தெய்வச் சிலையார்.

5. எண்ணிடைச் சொற்கள் :

ஒன்றனோடு ஒன்றனை எண்ணுகின்ற பொழுது அவ் வெண்ணினைக் குறித்தற்கு அவற்றினிடையே வரும் சொற்களை எண்ணிடைச் சொற்கள் என்பர். அவையாவன : (1) உம், (2) என (3) ஏ, (4) எனு, (5) என்ரு, (6) செவ்வெண், (7) என்று (8) ஒடு என்பன.

(1) உம் என்பது :

இது எண்ணின்கண் வருகின்றபொழுது தொகை பெற்றும் பெறாதும் வரும். (39) அங்ஙனம் எண்ணின்கண் வருகின்ற பொழுது உருபுகள் இடையிடையே மறைந்துவரினும் இழுக்கில்லை (43).

(2) என என்பது :

இது எண்ணின்கண் வருகின்றபொழுது தொகை பெற்றும் பெறாதும் வரும்(39). இது எண்ணின்கண் வருங்கால் ஓரிடத்தில் நின்று பிறிதோரிடத்திலும் சென்று ஒன்றுதலும் உண்டு (46).

(3) ஏ என்பது :-

இது எண்ணின்கண் வருகின்றபொழுது சொற்ருெறும் வாராது இடையிட்டுவரினும் அவ்வெண்ணினைக் குறித்து வந்த தென்றே கருதப்படும் (40) இது எவ்விடத்து வரினும் தொகை பெற்றே வரும் (42).

(4) எனு என்பது :

'எனுவும்' என்ற சொல் உம்மை தொக்கு 'எனு' என நின்றது. உம்மையோடிருப்பின் இது உம்மைத் தொகையு ளடங்கும். உம்மையின்றி யிருப்பதால் இதனைப் பிரித்து வேறு கூறினர். இது எண்ணிடைச் சொல்லாய் வரும்பொழுது தொகை பெற்றே வரும் (41, 42).

5. என்ரு என்பது :

'என்ருவும்' என்ற சொல் உம்மை தொக்கு 'என்ரு' என நின்றது. உம்மையோடிருப்பின் இது உம்மைத் தொகையு ளடங்கும். உம்மையின்றி யிருப்பதால் இதனைப் பிரித்து வேறு கூறினர். இது எண்ணிடைச் சொல்லாய் வரும்பொழுது தொகை பெற்றே வரும் (41, 42).

(6) சேவ்வேண் :

பெயர் வினைகளில் எண்ணிடைச் சொற்கள் தொக்கு நிற்பின் அது செவ்வெண்ணும். இது பெயரில் வரும்பொழுது தொகை பெற்றே வரும் (42).

எனவே தொகைபெற்றே முடியும் எண்ணிடைச் சொற்கள் எண்ணேகாரம், எனு, என்ரு, பெயர்ச் செவ்வெண் என்ற நான்கென அறியலாம். இவையொழிந்த உம், என, என்று, ஓடு ஆகிய நான்கனுள் உம் என என்பன தொகை பெற்றும் பெருதும் வருமென்பர் தொல்காப்பியர் (39). நன்னூலார் என்று ஓடு என்பனவும் தொகைபெற்றும் பெருதும் வருமென்பர், இவற்றையெல்லாம் தொகுத்து நன்னூலார்,

"பெயர்ச்செவ் வெண்ணே யென்ரு வெனுவெண்
நான்குந் தொகைபெறும்; உம்மையென் றெனவோ
டிந்நான் கெண்ணுமஃ தின்றியு மியலும்". (இடை. 9)

என்னும் நூற்பாவால் மிக அழகாகக் கூறுமாறு காண்க.

(7) என்று என்பது :

இது எண்ணின்கண் வருங்கால் ஓரிடத்தில் நின்று பிறிதோரிடத்திலும் சென்று ஒன்றுதலும் உண்டு (46).

(8) ஒடு என்பது :

இதுவும் மேலயது போலவே எண்ணின்கண் வருங்கால் ஓரிடத்தில் நின்று பிறிதோரிடத்திலும் சென்று ஒன்றுதலும் உண்டு (46). நன்னூலாரும்,

" என்று மெனவு மொடுவு மொரோவழி
நின்றும் பிரிந்தென் பொருடொறு நேரும் " (இடை - 10)

எனக் கூறுதல் காண்க.

6. புறனடை :

மேற்கூறிய எண்ணிடைச் சொற்கள் வினையொடு வருகின்ற பொழுதும் தத்தம் நிலையினின்றும் திரியா; அவற்றவற்றிலக்கணங்களை ஆராய்ந்து தெளிதல் வேண்டும் என்பதாம் (45). இதனையே

" வினையொடு வரினுமெண் ணினைய வேற்பன " (இடை. 11)
என நன்னூலார் கூறுதல் காண்க,

செய்யு மென்னும் பெயரெச்சத்தின் இறுதியில் வருகின்ற 'உம்' என்பது 'உந்'தாகத் திரிதலும் உண்டு. (44)

இதுகாறும் கூறப்பட்ட இடைச்சொற்களுக்கு இச்சொல்லிற்கு இப்பொருள் என வரையறுத்து ஓதப்பட்டனவாயினும், அச்சொற்களின் முன்னும் பின்னும் நின்ற வினையொடும் பெயரொடும் இணைத்து நோக்க அச்சொற்கள் முற்கூறிய பொருளிலன்றி வேறு பொருளில் வருமாயினும் அவற்றையும் ஏற்றுக்கொள்க என்பதாம் (47).

மேற்கூறப்பட்ட இடைச் சொற்களேயன்றி வேறு பிற இடைச்சொற்கள் வருமாயினும் அவற்றையும் ஏற்றுக்கொள்க என்பதாம் (48).

(தொடரும்)

# தமிழ் கூறு நல்லுலகம்

திரு. அ. கலியபெருமாள், எம். ஏ.,

(மலர் 24, இதழ் 3, பக்கம் 168 இன் தொடர்ச்சி)

"கடல் தரும் பண்டங்களை உடைய சோணாட்டுக் கடற்கரை ஓரம்; பண்டங்களை ஏற்றி வந்த பெருங்கலம் ஆற்றுமுகத்துள் நுழைகிறது. கலத்தில் பாய் மரத்தோடு கட்டிய பாய் இன்னும் களையப்படவில்லை; ஏற்றப்பட்ட பண்டங்களின் பாரம் இறக்கப் படவில்லை. பாய், களையாது பாரம் இறக்காது நுழைந்த கலத்தினின்றும் பரதவர் பண்டங்களைக்கொண்டு செல்கின்றனர். எடுத்துச் செல்லப்படும் பண்டங்கள் இடைப்புலப் பெருவழியில் சிந்துகின்றன. ஆனால் அவர்கள் அதைப்பற்றிச் சிறிதும் கவலைப்படவில்லை. அளவுக்கு மீறிய பொருள்கள் அவர்களிடம் குவிந்து கிடப்பதால், பொருள்களின் அருமை அவர்களுக்கு எங்கே தெரியப்போகிறது?

" கூம்பொடு, மிசைப்பாய் களையாது மிசைப்பரந் தோண்டாது
புகாஅர்ப் புகுந்த பெருங்கலம் தகாஅர்
இடைப்புலப் பெருவழிச் சொரியும்
கடல் பல் தாரத்த நாடு" (புறம். 30)

என்னும் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் பாடல் காட்டும் காட்சி இது.

அதே சோழநாட்டுக் கடற்கரை; எண்ணரிய கலங்கள் நின்றுகொண்டிருக்கின்றன. காற்றின் உதவியால் கரைசேர்ந்த அவற்றை அக்கடற்கரையில் வளர்ந்துள்ள புன்னை மரச்சோலையிலிருந்து எண்ணுகின்றனர் அங்கு வாழ்வோர்.

" கடலே, கால்தந்த கலனெண் ணுவோர்
கானற்புன்னை சினை அலைக்குந்து" (புறம். 386)

கலங்கள் அசைகின்ற புகாரின் கடற்கரை யோரம்; அலைதரு பண்டமும், மலைதரு பண்டமும் நிரைநிரையாகக் குவிந்து கிடப்பது, குற்றமற்ற காட்சியாகத் திகழ்கிறது.

"நிரைநிரையாக எடுத்த புரைதீர் காட்சிய
மலைப்பல் தாரமும் கடற்பல் தாரமும்
வளந்தலை மயங்கிய துளங்குதல இருக்கை"
(கடலாடுகாதை 152 - 54)

"வளம் இடந்தோறும் மயங்கிக் கிடக்கிறது" என்று கூறிய அளவில் அலை, மலைத்தாரங்களின் அளவும் பெருமையும் நமக்கு நன்கு விளங்குகின்றன.

கையிலே பண்டம் இருக்கிறது; விலையாகக் கடலுக்கப் பால் பட்டினங்கள் இருக்கின்றன; கடந்து செல்வதற்கோ கலம் இருக்கிறது. ஆகவே வணிகர் அருங்கல உதவியால் தாம் விரும்பும் பட்டினம் சென்று ஏற்றிய பண்டங்களைக் கொடுத்து விட்டு ஆண்டுள பண்டங்களைக்கொண்டு இடையூறின்றித் திரும்பினர்.

"தாம் வேண்டும் பட்டினம் எய்திக் கரை சேரும்
ஏமுறு நாவாய்" (பரிபாடல் 10)

ஞாலம் வரினும் வழங்கக்கெடாத வளத்தினை உடையதாகிப் பெறற்கரும் பொருள்தரும் அயல் நாடுகள் யாவும் ஒருங்கே தொகுத்தாற்போன்ற பண்டங்களைக் கடல் வழியே கலத்தாலும் நிலவழியே வண்டிகளாலும் கொணர்கின்றனர் வணிகர் என்பதை,

"முழங்குகடல் ஞாலம் முழுவதும் வரினும்
வழங்கத் தவாஅ வளத்த தாகி
அரும் பொருள் தருஉம் விருந்திற் றேஎம்
ஒருங்குதொக் கன்ன உடைப்பெரும் பண்டம்
கலத்தினும் காலினும் தருவனரிட்ட"
(மனையறம்படுத்தகாதை 3-7)

என்னும் சிலப்பதிகார அடிகளால் அறியலாம். பொருளீட்டுவதற்காகப் பொருள்களைக் கலங்களில் ஏற்றிக்கொண்டு வணிகர்

செல்வதை " வங்கம் போகும் வாணிகர் " என்று மணிமேகலை குறிக்கக் காண்கிறோம்.

மிளகுப் பொதிகள் ஏற்றவும் இறக்கவும் படுதலால் கடற்கரையில் ஆரவாரம் மிகுந்து தோன்றுகிறது. வெளிநாடுகளுக்குப் பண்டங்களைக் கொடுத்துவிட்டு விலையாகப் பொன்னுகிய பொருள்களைக் கலங்கள் ஏற்றி வருகின்றன. அப்பொன்னைக் கழிகளில் இயங்கும் தோணிகள் கரை சேர்க்கின்றன. முசிறியின் வாணிக வளம் இது.

" மனைக் குவைஇய கறிமூடையால்
கலிச் சும்மைய கரைகலக் குறுந்து
கலந்தந்த பொற்பரிசம்
கழித் தோணியால் கரை சேர்க்குந்து " (புறம். 343)

மேலைநாடுகளுடன் தமிழகம் மிகுதியாக வாணிகத் தொடர்பு கொண்டிருந்தது. நம் நாட்டு வணிகர்கள் மேலை நாட்டிற்குச் சென்றும், மேலைநாட்டு வணிகர்கள் நம் நாட்டிற்கு வந்தும் வாணிகத் தொடர்பை வலுவாக்கிக் கெகண்டனர். வாணிகத் தொடர்பன்றி வேறு சில தொழில் தொடர்பாகவும் மேலை நாட்டினர் தமிழகம் வந்தனர். அவர்களையெல்லாம் கிரேக்கர், உரோமர், அரேபியர் என்று தனித்தனியாகக் குறிப்பிடாமல் பொதுவாக " யவனர் " என்று அழைக்கிறது தமிழ் இலக்கியம் யவன தேயத்தினின்றும் புரவிகள் தமிழகத்திற்கு வந்தன என்பதை,

" பால்கேழ், வாலுளை புரவியொடு வடவளந்தருஉம்
நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை " (பெரும்பாண் 319-21)

" நனந்தலை தேய்த்து நன்கலன் உய்ம்மார்
புணர்ந்துடன் கொணர்ந்த புரவி " (மதுரைக் 323-24)

" நீரின் வந்த நிமிர்பரிப் புரவி " (பட்டினப். 185)

என்பன போன்ற அடிகளால் முன்னர்க் கண்டோம்.

உயர்ந்த மது வகைகளை யவனர் தமிழகத்தில் இறக்குமதி செய்தனர் என்பதைப் புறம் கூறுகிறது.

" யவனர், நன்கலம் தந்த தண்கமழ் தேறல் " (புறம். 56)

யவனர்களிடம் வேலைப்பாடமைந்த கலங்கள் இருந்தன. அவைகளில் பொன்னை நிரப்பிவந்து கொடுத்துவிட்டு அதற்கீடாக முசிறியிலிருந்து மிளகை ஏற்றிச் சென்றனர்.

" சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி " (அகம் 149)

மகளிர் அகிலோடு கண்டு சருக்கரையைப் புகைத்தல் பண்டைக்கால வழக்கம். அக்கண்டு சருக்கரை யவன தேயத்தினின்றும் பெருமளவில் தருவிக்கப்பட்டது. " குடதிசை மருங்கின் வெள்ளகில் " (அந்திமாலைச் சிறப்புச் செய்காதை-35) என்னும் சிலப்பதிகார அடிக்கு " யவன தேசத்து அயிர் ", என்று விளக்கம் தந்திருப்பது இதை வலியுறுத்துகிறதல்லவா.

பண்டைத் தமிழர் வீடுகள்தோறும் பாவை விளக்குகள் அணி செய்தன. வேலைப்பாடமைந்த இவ்விளக்குகள் யவனர் தம் கை வண்ணத்தால் உருப்பெற்றவை.

" யவனர் இயற்றிய வினைமாண் பாவை
கையேந்து ஐஅகல் நிறைய நெய்சொரிந்து "
(நெடுநல்வாடை 101-102)

யவனரால் இயற்றப்பட்ட அன்னப்புள் வடிவாய் அமைந்த விளக்குகளும் அக்காலத்தே உண்டு. இதனைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார்

" யவனர், ஓதிம விளக்கின் உயர்மிசைக்கொண்ட "
(பெரும்பாண் 316-17)

என்று குறிப்பிடுகின்றார்,

(தொடரும்)

# தமிழகத் திருக்கோயில்கள்

திரு. கு. தண்டாயுதம்

( மலர் 24, இதழ் 3, பக்கம் 152 இன் தொடர்ச்சி )

## 4. திருவுருக்கள் :

நானிலக் கடவுளர் நிலவும் மாநில மெங்கும் ஓரிறைவர்க்கு ஓராயிரம் உருவங்களை உருவாக்கலே உயர்கலைஞரின் படைப்பு. பெருங்கோயில்களில் மூலவர் முன்புகளுடன் சுற்றுக்கோயில் களும் தோற்றுவித்தனர். இக்கோயில்களெங்கும் பெரும்பாலும் மூலவர்கல்லாலும், விழாக் கடவுளர் செம்பாலும், ஐம்பொன்னு லும் அமைக்கப்பட்டவையாம். சில விடங்களில் கல்லாலாய கடவுளர் படிமம் விழாக்களில் வெளிப்போந்தமை விளக்க மாகின்றது.

தஞ்சையில் சண்டீசுவரரின் வாழ்க்கைக் கோலங்கள் பல வடிவுடைச் சிற்பங்களாக வைக்கப்பட்டிருந்தன. நாட்டிய நிலை யிலும், நின்ற நிலையிலும். அமர்ந்த நிலையிலும் கணபதியின் உருவங்கள் சிலவற்றை முதலாம் இராசராசன் நிறுத்தியிருந் தான். சில பதிகளில் வெள்ளியாலாய விழா வுருக்கள் வைக்கப் பட்டிருந்தன. அரசர்கள் தாம் அவாவிய அழகுடைக் கடவுளரை எனக்கு நல்ல பெருமாள் என்றும் 'எந்தோழரென்றும்' ஆராக் காதலுடன் அழைத்து வந்தனரென்ருல், அவர் தம்பற்றினை என்னெனப் புகல்வது? சைவ சமயத் தலைவர்களாம் நால்வர்க் கும் திருமுன்புகள் திருப்பதிகள் தோறும் திகழ்ந்தன. மேலும் சிறுத்தொண்டர் தம் மனைவி மகனுடன் மற்ருெரு முன்பில் நின்றுகொண்டிருப்பார். கண்ணப்பரும், மிலாடுடையாரும் ஏனைய திருமுன்புகளில் வீற்றிருப்பர். திருத்தொண்டர்கள் விழாக்களில் உலாச் சென்று வருதலும் உண்டு. ஆண்டவனும் அடியாரும் அமைகின்ற ஆலயங்கள் சிலவற்றில் அரசரது உருவங்களும் அமைவுற்றிருந்தன. அமரபுசங்கத்தேவன் உருவம் போன்ற அரசவுருவங்கள் அதற்குக் காட்டாகும். 'உச்சி மேற் புலவர் கொள் நச்சினர்க்கினியர்' பெரிய கோட்டைப்பகுதி யில் வீற்றிருந்தார். அவர் திருமுன்பிற்கு இராஜகேசரிவர்ம

சோழன் திருவிளக்கேற்றி வைத்த செய்தியினைக் கல்வெட்டில் காண்கின்றோம்.

5. திருவிழாக்கள் :

திருக்கோயில்களில் நாளும் திங்களும் விழாக்களை நடாத்தி வந்தனர். ஆடிப்பூரம், ஐப்பசிப்பூரம், மார்கழித் திருவாதிரை, ஐப்பசித் திருவோணம், வைகாசித் திருநாள், மாசித்திருநாள்-பங்குனித்திருநாள் போன்ற பல விழவுகளுடன் வழிபாடுகள் நிகழும். மார்கழி, பங்குனித்திங்களில் திருப்பள்ளியெழுச்சியைச் சிறப்புறச் செய்வர். திருவெம்பாவை ஓதுவர். தேர்த்திருவிழாக்களை மேற்கொள்வர். ஆண்டவனுக்கு மட்டுமின்றி அடியவர்க்கும் விழா எடுப்பர். அங்ஙனம் நிகழ்த்திய திருவிழாக்களில் திருநாவுக்கரசர் திருவிழா, சிறுத்தொண்டநம்பித் திருவிழா போன்றன நினைவுறத்தக்கவை.

திருநாட்களில் இறைவன் நதிக்கரைக்கு எழுந்தருள்வான், அதன்பொருட்டு அழகிய சாலைகள் அமைக்கப்பட்டன. உலா வருதற்கேற்ப வீதிகளையும் வருங்காலத்தையும் வரையறுத்த சோழனது ஆணையொன்று திருவிடைமருதூர்க் கல்வெட்டொன்றில் காணக்கிடக்கின்றது. இவ்வாறெல்லாம் இறைவன் இனிதாக இவர்ந்துவர வேண்டுமென எல்லோரும் விரும்பினர் போலும், நோயுற்ற அரசன் நலன் பெறவும், செருக்களம்சென்ற வேந்தன் வாகை சூடவும் விழாக்களும் வழிபாடுகளும் நடாத்துவது உண்டு. பேரரசர் பேரிலும் வழிபாடாற்றப்படும். அவ்வழக்கில் சுந்தரபாண்டியன் சந்தி, கோதண்டராமன் சந்தி, அவனிவென்ற இராமன் சந்தி போன்றன சில. திருப்பள்ளியெழுச்சியின்போது கொட்டுக் கொட்டப்படும், கொம்புகள் ஊதப்படும், சங்கங்கள் இயம்பப்படும், விழா நாட்களில் இறைவனுக்கும் இறைவிக்கும் திருமணம் இனிது நடைபெறும்.

பள்ளியறைச் சந்தியின்போது பாக்கு வெற்றிலை வைப்பர். இறைவியர்க்குச் சில விடங்களில் களிபடைப்பர். சிலவேளை இறைவர்க்குக் களிபடைப்பர். ஆயினும் பெரும்பாலும் திருவமுது படையலே எங்குமுண்டு. ஸ்நபன மண்டபத்தில் திருமுழுக்கு தீர்த்தத்தால் நடைபெறும். காவிரியினின்றும் நீர் கொண்டு வருவர். நறுமணங்கலந்த நன்னீர் பன்னீருடன் பொற்குடத்தால் இறைவன் இறைவியரை நீராட்டுவர். திருநாட்களில் இறைவன் இறைவி புனலாட்டுக்காகப் புணரி

நோக்கிப் போதல் பழங்காலப் பழக்கமாகும். விழாக்களில் ஆயிரத்திற்கு மேற்பட்ட அடியவர் அமுதுபெறுவர். அதன் பொருட்டுப் பொன்னும் பொருளும் பூமியும் வழங்கப்படும். இவ்வாறு சிறப்பொடு பூசனை புரிந்தமையான் பொதுவாழ்வில் சமயவுணர்வு சிறப்புற நின்று நிலவிற்று. கலையுணர்வும், மெய்யுணர்வும் வளரலாயின.

## 6. ஆடலும் பாடலும்:

கலைக்கோயில்களிடையே ஆடலரங்கங்கள் அமைந்திருக்கும். இறைவன் திருமுன்புகளில் முன்னே அமைந்த மன்றங்கள்மீது ஆடற் கணிகையர் ஆடுவர். விழாக்கடவுளர் வெளிவரும் காலத்தும் அவர்கள் ஆடிச் செல்வர். அவர் தம் ஆடற் பயிற்சிக்கு ஆடலாசிரியர் அமர்த்தப்பட்டிருந்தனர். அவர்களும் அபிநயத்துடன் ஆடவேண்டும். ஆடலாசிரியர்கள் நோயுற்ற நாட்களில் மாற்றுக மற்றொருவர் அப்பணியை மேற்கொள்வர். நாடகக் கணிகையரும் கோயில்கட்குக் கொடை வழங்கியுள்ளனர். ஆடற் கணிகை யொருத்தி அழகிய கோயிலொன்றை அமைத்துக் கொடுத்ததனை வரலாற்றில் அறியலாம். கணிகை யொருத்தி திருவிளக்கேற்றி வைக்க இசைந்ததனையும் காணலாம். சித்திரைத் திருநாளில் சாந்திக்கூத்து நடைபெற்று வந்தது. வைகாசி விழாவிலே தஞ்சைப் பெருங்கோயிலில் 'இராசராசேச்சுவரர்' நாடகம் நிகழ்ந்து வந்தது.

திருக்கோயில்களில் பதிகங்களும், பாமாலைகளும் பாடப் பெறும். சில பதிகளில் அவற்றை உடுக்கை, தாளத்துடன் பாடுவர். பாடுமிடம் திருக்கைக் கோட்டி மண்டபம் என்று அழைக்கப்பட்டது. தேவாரப் பதிகங்கள் மிகச் சிறப்பாகப் பாடப் பெற்றன. மார்கழி, பங்குனி, மாதங்களில் திருவெம்பாவை இனிது ஓதப்பட்டது. கலைஞன் ஒருவன் வீணை வாசிக்க, இன்னொருவன் இன்னிசை பாடுவான். வீணைக்கலைஞன் பெற்ற நிலத்தை 'வீணைக்காணி' யென வழங்கினர். சில சமயத்தில் சாமவேதம் ஓதப்பட்டது. அதை ஓதும் முறை கல்வெட்டில் பொறிக்கப்பெற்றிருக்கிறது. ஏனைய வேதம் ஓதப் பார்ப்பனர் பலர் இருந்தனர். அவர்கள் பொன்னும் பூமியும் பெற்றிருந்தனர். மகாபாரதச் சொற்பொழிவு சிலவேளை நிகழ்வதுண்டு. சிவதர்மத்தைப்பற்றிய பேருரைகள் பெருவிழாக்களில் நிகழ்ந்து கொண்டிருக்கும். திருமுறைகளும் மறைகளும் ஓதியுணர்ந்து உள்ளுவகை எய்தலே அன்றைய சமயநோக்கென அறிகின்றோம்.

உவச்சர்கள் பேரிகை கொண்டு பேரொளி எழுப்புவர். முழுவதிர, எக்காள மிசைக்க இசைக்குழுவினர் எப்போது மிருப்பர். வாச்சியமாரன் உள்ளிட்ட இக்குழு திருநாளிலும். மறுநாளிலும் இன்னொலி எழுப்பிக்கொண்டேயிருக்கும்.

7. திருப்பணிகள் :

"என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற பண்பையும் பயிற்சியையும் பலகாலம் போற்றிய தமிழரின் திருப்பணியோ வரையில. தமிழர் தம்மாலியன்ற அளவு பொன்னும் பொருளும் வழங்கிய வரலாற்றுச் செய்திகளையே கல்வெட்டுக்களில் விளக்கமாகக் காண்கின்றோம். அத்துறையில் ஏனைய திருப் பணிகளும் எடுத்துக்காட்டத்தக்கன. தமிழகக் கோயில்களில் தமிழிசை வளர்ந்து வந்த காலமாகையால் பல்லோர் வழங்கிய இசைக் கருவிகளைப்பற்றி ஈண்டு அறிதல் அவசியமாகிறது. எக்காளம், சங்கம், மணி, குடமுழா போன்றவை குறிக்கத்தக்கன.

விழாக்களில் கடவுளரை உலாச்செய்வித்தற்காகத் தேர் களன்றி ஏனைய ஊர்திகளும் இருந்தன. ஓர் ஊரில் உள்ள கோயிலொன்றுக்குக் களிற்றுப்பாடி (களிறு - யானை, பாடி, வண்டி) ஊர்தியை வீரபாண்டியன் வழங்கியிருந்தான். இன் னொரு ஊஞ்சற்கட்டில் (வெள்ளி) ஒருவரால் வழங்கப் பட்டிருந்தது. தங்கப் பீடங்கள், தங்கச் சிம்மாசனங்கள் இன்ன பிற இருக்கைகளும் சில விடங்களில் இருந்தன. திருவடிப் பீடங்களும் அந்நாட்களில் உண்டு.

இறைவர்க்கு வேண்டிய ஆடைகளைச் சாலியச் செட்டிகள் வழங்கி வந்தனர். இரட்டைமணி, தாலி, கெம்புக் கோவை, முத்துமாலை, வைரமணி, நெற்றிப்பட்டங்கள், மாந்தளிர், கைவளை இவற்றை இறைவர்க்கு அணிவித்திருந்தனர். இறைவிக்கு மேகலையும் இடையில் இலங்கிற்று. அணிகலன் யாவும் பொன், வெள்ளி இவற்றால் பெரிதும் அழகுற அமைக்கப் பட்டவை.

வடிதட்டு, கிண்ணம் போன்ற பொற்கலங்கள், வாளி, தட்டு இவை போன்ற வெள்ளிக் கலங்கள், மற்றும் உப்புத்தாலம், குடம் போன்ற கலங்களும் தகையாளர் பலரால் தரப்பட்டிருந்தன.

(தொடரும்).

# சஹஸ்ராகமம்

சிவாகம வித்துவான்

திரு. S. சுவாமிநாத சிவாசாரியார்

( மலர் 24, இதழ் 3, பக்கம் 164 இன் தொடர்ச்சி)

दर्पणेवाऽथ कूर्चेवा कल्पयेच्छलमासनम् ।
तैलादिकुम्भपर्यन्त मभिषेकं समाचरेत् ॥ 483

तन्मूर्ति योजयेत्कुंभे गन्धमाल्यैश्च भूषयेत् ।
मन्त्रोदनं च तांबूलं दापयेद्धूपदीपकौ ॥ 484

பூஜாங்கமான அபிஷேகத்தின்பொருட்டு, கண்ணாடியிலோ, கூர்ச்சத்திலோ சலாஸனம் பூஜித்து அந்தக்கூர்ச்சத்தில் சிவனைத் தியானித்து தைலம் முதல் கலசாபிஷேகம் வரையில் செய்து முடித்து அந்த மூர்த்தியைக் கும்பத்தில் சேர்த்து சந்தனம் புஷ்பங்களால் நன்ருக அலங்காரம் செய்து, தூபம்தீபத்துடன் மந்திரான்னம் நிவேதனம் சேய்து தாம்பூலம் சமர்ப்பிக்கவேண்டும்.

होमं कुर्यद्विधानेन पश्चान्नैवेद्यमाचरेत् ।
पूर्वोक्त विधिमार्गेण उपचारान्समर्प्य च ॥ 485

पुण्याहमभिषेकं च द्वाराद्यर्चन होमकान् ।
द्विकाले कारयेदेव मन्यकाले विधीयते ॥ 486

निर्माल्यं च विसृज्याऽथ नैवेद्य धूपदीपयुक् ।
अहन्यनि संपूज्य निर्दिष्टदिवसावधि ॥ 487

முறைப்படி ஹோமம்செய்து பிறகு நைவேத்யம் செய்யவேண்டும், முன் கூறியபடி உபசாரம் செய்து சமர்ப்பிக்கவேண்டும், புண்யாஹம், அபிஷேகம், துவாரபூஜை, ஹோமம் இவைகள் இரண்டு காலத்தில் செய்யவேண்டும், மற்றக் காலங்களில் நிர்மால்யத்தை விஸர்ஜனம் செய்து தூபதீபத்துடன்

நைவேத்யம் செய்யவேண்டும். இவ்வாறு தினம் தினம் குறிப்பிட்ட காலம் வரையில் செய்யவேண்டும்.

पश्चात् गर्भगृहं प्राप्य सामान्ययजनं कुरु ।
अष्टबन्धनकाले च नंद्यावर्त विहीनके ॥ 488

स्थल कर्माणि विश्लिष्टे सुधाकर्म विहीनके ।
क्षण काले गृहीत्वातु पुनस्सन्धानमाचरेत् ॥ 489

இவ்வாறு யாகசாலையில். பூஜைசெய்து வரும்போது மூல லிங்கத்தினிடம் சென்று சாமான்யமாக பூஜைசெய்து வரவேண்டும். (இது சுவாயம்புவலிங்க விஷயம்) அஷ்டபந்தன காலத்திலும், நந்தியாவர்த்தசிலை சேதம் அடைந்த காலத்திலும் தளவரிசைகள் சேதமடைந்த காலத்திலும், சுண்ணம்பு பூசினது ஜீர்ணமான காலத்திலும் உடனுக்குடன் அவற்றைச் சீர்படுத்தி சந்தானம் செய்யவேண்டும்.

त्रिपञ्च दिवसस्नानभङ्गं चेत् शिवलिङ्गके ।
थत्तत्पूजादिकं सर्वं पूजयेत्तु शिवाध्वरे ॥ 490

मूललिङ्गे विशेषेण शान्तिहोमं समाचरेत् ।
शान्ति कुम्भांभसाप्रोक्ष्य पूजयेद्देशिकोत्तमः ॥ 491

மூன்றுநாட்கள் ஐந்துநாட்கள் சிவலிங்கத்திற்கு அபிஷேகம் நின்றுவிடுமாகில், மூலலிங்கத்திற்குச் செய்யவேண்டிய அந்த அபிஷேகம் முதலியவைகளை, யாகசாலையில் செய்துகொண்டு மூலலிங்கத்திற்கு விசேஷமாக சாந்திஹோமம் செய்து அந்த சாந்திகும்ப ஜலத்தினுல் புரோக்ஷித்து அபிஷேகமில்லாமையினுல் உண்டான தோஷப்பிராயச்சித்தம் செய்யவேண்டும். (இது முக்கியமாக சுவாயம்புவலிங்க விஷயமாகும்)

निर्दिष्टदिवसात्पूर्वं सायं होमावसानके ।
मूललिङ्गान्तिकं गत्वा शोधयेद्देशिकोत्तमः ॥ 492

கும்பாபிஷேகம் செய்வதற்கு முதல்நாள் சாயங்காலம், முறைப்படி பூஜை ஹோமம் முதலிய எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு மூல லிங்கத்தினிடம் சென்று, பீடம் லிங்கம் முதலியவற்றை நன்ருக சோதனம் செய்துத் துடைத்துச் சுத்தமாக வைக்கவேண்டும்.

पीठांशं षोडशं कृत्वा चैकांश नवरत्नकम् ।
दशांशं सैकतैर्युक्तं पञ्चांशं बन्धयेत् क्रमात् ॥ 493

மூலலிங்கத்தின் பீடத்தின் உயரத்தை பதினாறு பங்கு செய்ய வேண்டும். அதாவது இலிங்கத்தின் அடிப்பாகமான நாற்கோணம் முதல் மேல் எண்கோணம் முடிய வுள்ளதான லிங்கத்திற்கும் ஆவடையாருக்கு முள்ள இடை வெளியிலுள்ள உயரத்தைப் பதினறு பங்கு செய்து, அதன் அடியிலுள்ள ஒரு பங்கை நவரத்னங்களால் நிரப்பி, அதற்கு மேலுள்ள பத்துப்பங்கை, சுத்தமான மணல்களால் நிரப்பி அதற்குமேலுள்ள ஐந்துபங்கை அஷ்டபந்தன மருந்தினல் நிறைத்துப் பந்தனம் செய்ய வேண்டும்.

त्र्यंगुल प्रमाणेन स्वर्णेन चतुरङ्गलम् ।
विलिख्य शिवबीजानि मध्यरन्ध्रावटेक्षिपेत् ॥ 494

மூன்று அங்குலம் சதுரமாக சுவர்ணத்தினல் ஒருபட்டயம் (செய்து) அதன் நடுவில், பஞ்சாக்ஷர மந்திரத்தை எழுதி சிவலிங்கத்தின் ஆதார சிலையிலுள்ள நாதக்குழியின் நடுவிலிருக்கும் பள்ளத்தில் வைக்கவேண்டும் (நாதக்குழி என்பது சிவலிங்கத்தின் அடிப்பாகம் தங்கியிருக்கும் பள்ளம்)

माणिक्यं मध्यमेन्यस्य चक्रे मरकतं न्यसेत् ।
इन्द्रनीलं तथा याम्ये स्फटिकं वारुणे न्यसेत ॥ 495

वज्रंतु सौम्यदिग्भागे वैडूर्यं वह्निगोचरे ।
मौक्तिकं नैऋते देशे पद्मरागंतु मारुते ॥ 496

प्रवालमीशेविन्यस्य चतुस्संस्कारकं कुरु ।
मूलमंत्रेण संपूज्य षड्वासनमर्चयेत् ॥ 497

இவ்வாறு நாதக்குழியில் வைக்கப்பட்ட சுவர்ணத்தகட்டின் நடுவில், மாணிக்க ரத்னத்தை வைக்கவேண்டும். இதுபோல் கிழக்கில் மரகதத்தையும், தெற்கில் இந்திரநீல ரத்னத்தையும். மேற்கில் ஸ்படிகத்தையும், வடக்கில் வைரத்தையும், தென்கிழக்கில் வைடூர்யத்தையும், தென்மேற்கில் முத்தையும், வடமேற்கில் பத்மராகத்தையும், வடகிழக்கில் பவழத்தையும்வைத்து நிரீக்ஷணம்

முதலிய நான்கு ஸம்ஸ்காரங்களையும் செய்து மூலமந்திரத்தினு லர்ச்சித்து ஷடுத்தாஸனம் பூஜை செய்யவேண்டும், (ஷடுத்தாஸனம் என்பது அநந்த தரும ஞான வைராக்ய ஐச்வர்ய, பத்ம, என்ற மந்திர அருச்சனையுடன் கூடிய ஆஸனம்)

मुकुळीं पद्ममुद्रांच शोधनींच प्रदर्शयेत् ।
मध्यादीशानपर्यंतं विन्यसेन्मूलमंत्रतः ॥ 498

पूरयेत्सिकतैश्शुद्धैर्लिङ्गे पीठं दृढी भवेत् ।

ஷடுத்தாஸனம் பூஜை செய்யப்பட்ட நவரத்னங்களுக்கும் முகுளீமுத்திரை, பத்மமுத்திரை சோதனீமுத்ரைகாட்டி நடுப் பாகம் முதல் வடகிழக்குப் பாகம் வரையிலுள்ள அந்த நவரத்னங் களிலும் இறைவனின் மூலமந்திரத்தை நியாஸம்செய்து நல்ல சுத்தமான மணல்களால் இலிங்கத்தில் பீடம் கெட்டியாக ஆகும் வரையில் கெட்டிப்படுத்தவேண்டும்.

प्रासादाग्रके याम्ये पावकेवान्य देशके ॥ 499

गोमयेनोपलिप्याऽथ चतुरश्रद्वयं ततः ।
स्थण्डिलं च प्रकल्प्याऽथ चाष्टपत्रं सकर्णिकम् ॥ 500

नव पात्र समायुक्त मथवा चैकपात्रकम् ।
पुण्याहं वाचयेत्तत्र सर्वद्रव्याणि प्रोक्षयेत् ॥ 501

ப்ராஸாதத்தின் எதிரிலோ, தென்புறத்திலோ, தென்கிழக் கிலோ, அல்லது ஏதாவதொரு சௌகரியமான விடத்தில் கோமயம் போட்டு மெழுகி, நாற்கோணமாக இரண்டு இடம் செய்து, அதன் நடுவில் ஸ்தண்டிலம் செய்து அதன்மேல் கர்ணிகையுடன் கூடிய எட்டு இதழ் தாமரைப்பூ வரைந்து, அதன் மேல் ஒன்பது பாத்திரம் வைத்து அல்லது ஒருபாத்திரம் வைத்து அங்கு சுத்தியடைய வேண்டியதன்பொருட்டு புண்யாகவாசனம் செய்து அஷ்டபந்தனத்திற்குரியதான எல்லாத் திரவியங்களை யும் ப்ரோக்ஷிக்கவேண்டும்.

( தொடரும் )

# சித்தாந்த விஞவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்.

( மலர் 24, இதழ் 3, பக்கம் 172 இன் தொடர்ச்சி )

## சத்தியது தன்மை

மாணுக்கன் : சம்பு பட்ச அணு பட்சங்களைப்பற்றி விரிவாக விளக்கினீர்கள் ; எந்நிலையிலும் இறைவன் தனது செயல்களை நடாத்துதல் தனது சத்தியினுலே என்பது, அவ்விளக்கங்கள் எல்லாவற்றிலும் அமைந்திருந்தது. 'இறைவனது, 'தடத்த லக்கணம்' எனப்படும் பொதுவியல்புகள் யாவும், அவனது சத்தியால் ஆவனவே' என்று முன்பும் அருளியுள்ளீர்கள். அதனுல் 'இறைவனும், அவனது சத்தியும்' என முதற்பொருள் இரண்டாகின்றது அன்ருே ! முன்பு உலகிற்கு முதற்பொருள் ஒன்றே என்று சொல்லி, பின்பு இரண்டு என்பது என்னை என்னும் ஐயம் உளதாகின்றது ; அதனை நீக்கியருளல் வேண்டும்.

ஆசிரியர் : 'பொருள்' என்ற சொல், இரண்டு பொருளைத் தரும். 'சொல்லால் குறிக்கப்படுவன யாவை, அவையெல்லாம் பொருள்' என்பது ஒன்று. இதுவே, 'பொருள்' என்ற சொல்லின் நேர்ப்பொருள். 'பல பெற்றிகளுக்குச் (தன்மைகளுக்குச்) சார்பாய் நிற்கும் பொருள், என்பது மற்ருென்று. இது பலவற்றிற்குப் பொதுவாய் நிற்கும் ஒரு பெயரை, அவற்றுள், தலைமையுடைய ஒன்றனை மட்டுமே குறிப்பதாகக் கொள்ளப்படும் முறையில் வரும் பொருளாகும்.

பல பெற்றிகட்குச் சார்பாய் நிற்கும் பொருள், குணத்தை நோக்கி, 'குணி' என்றும், அவயவத்தை நோக்கி, 'அவயவி' என்றும், உடைமையை நோக்கி, 'உடையது' என்றும் இங்ஙனம் பலவாருகச் சொல்லப்படும். இதற்கு அமைந்த நேர்ச்சொல் 'முதல்' என்பது. எனினும், 'பொருள்' என்பது, 'முதல்' என்னுங் கருத்திலேயே வழக்கின்கண் பெரும்பாலும் உள்ளது.

ஏனையவை. குணம் அல்லது பண்பு. அவயவம் அல்லது சினை - உறுப்பு, உடைமை முதலிய சொற்களாலேயே வழங்கப் படுகின்றன. 'முதல்' என்பதனையே, வடநூலார், 'திரவியம்' என்பர். எனினும், 'திரவியம்' என்பதனை, 'பொருள்' என்றே பெரும்பான்மையும் தமிழில் மொழிபெயர்த்து வழங்குகின்றனர். தமிழில், 'பெயர்' என்பது, 'முதல்' என்பதனையே. அது, பின்பு, முதலினைக் குறிக்கும் சொல்லுக்கு ஆயிற்று. பின்பு, இலக்கணத்தில் பெயரோடு ஒப்ப வேற்றுமையை ஏற்பன வெல்லாம் 'பெயர் எனப்பட்டன. இதனை, ''பெயரிற் றோன்றும் பாலறி கிளவியும்'' என்னும் நூற்பாவாலும் அதன் உரை களாலும் அறியலாகும். இம்முறையில் சிவமும், சத்தியும் வேறு வேறு பொருள்கள் அல்ல; அஃதாவது இரண்டும் இரண்டு முதல்கள் அல்ல; சத்தி குணமும், சிவம் அதனையுடைய குணியு மாகும். எனவே, சிவம் முதலும், சத்தி பெற்றி (தன்மை)யும் ஆகும் ஆதலின், உலகத்தைத் தொழிற்படுத்தும் தலைமைப் பொருள் ஒன்றேயல்லது இரண்டில்லை என்று உணர்வாயாக.

மாணுக்கன்: அடிகள் அருளிய வகையில், சிவமும், சத்தி யும் இரு முதல்கள் அல்ல எனினும், இருபொருள்கள்தாமே.

ஆசிரியர்:- 'இரண்டும் இரண்டு முதல்கள் அல்ல; சிவமே முதல்; சத்தி அதன் பெற்றி' என்றதனை உடம்பட்ட பின்னர், அவ்விரண்டினையும் இரண்டு பொருள் என்றே கொள்ளினும் வரும் குற்றம் என்னை? ஒன்றும் இல்லை. ஆதலின், தலைமை யாய்த் தன்வழி நிற்பதும்; அங்ஙனம் நில்லாது ஒன்றன் வழிப் பட்டு நிற்பதும் எனப் பொருள்கள் இருவகைப்படும் என்று ஆகி, சிவம் தலைமைப் பொருளும், சத்தி அதன் வழித்தாய் நிற்கும் பொருளுமாம் என்பதே முடிவாகும். அதனால் சிவமே உலகிற்கு முதல் என்பதாம்.

மாணுக்கன்: சிவமும், சத்தியும் இருமுதல்கள் அல்லாவிடி னும் இருபொருள்களாதலின் அவற்றிடை அமைந்த இயையு எத்தகையது?

ஆசிரியர்: முதலுக்கும், அதன் பெற்றிக்கும் அமைந்த இயைபே. சிவத்திற்கும் சத்திக்கும் அமைந்த இயைபாகும்.

மாணுக்கன்: முதலுக்கும், அதன் பெற்றிக்கும் உள்ள இயைபுதான் எத்தகையது?

ஆசிரியர் : ஒரு முதலுக்கும், அதன் பெற்றிக்கும் உள்ள இயைபே உண்மை இயைபு. அவ்வியைபு, 'கூட்டம், உடனிலை' முதலியனவாக அமையும். முதலுக்கும், அதன் பெற்றிக்கும் உள்ள இயைபு அவ்வாறின்றி. பான்மை இயைபேயாகும். அஃதாவது, முதலும் அதன் பெற்றியும் உண்மையில் பொருளும் ஒன்றேயாய் ஒருவாற்ருன் இரண்டாகப் புலப்படும் அத்துணை யேயாய இயைபாம். ஆகவே, முதல் இன்றி அதன் பெற்றி இல்லை : பெற்றி இன்றி முதல் இல்லை. முதலே பெற்றி ; பெற்றியே முதல், ஆதலின், சிவமும், சத்தியும் ஒருவாற்ருன் இரண்டாகப் புலப்படுகின்றனவேயன்றி, உண்மையில் அவை இரண்டும் முதல் மட்டும் அன்றி, பொருளும் ஒன்றே. எனவே, சிவம் இன்றிச் சத்தி இல்லை; சத்தி இன்றிச் சிவம் இல்லை. சிவமே சத்தி; சத்தியே சிவம்.

"அருளது சத்தி யாகும் அரன்றனக்கு அருளை யின்றித்
தெருள்சிவம் இல்லை; அந்தச் சிவம்அன்றிச் சத்தி இல்லை"

என்றது சிவஞான சித்தி,

இவ்வாறு நிற்கும் பான்மை இயைபே தமிழில், 'தற்கிழமை' என்றும், வடமொழியுள், 'சமவாயம், தாதான்மியம்' என்றும், சொல்லப்படுகின்றன.

பெற்றியின் திரட்சியே முதல் ஆதலின். முதலும், அதன் பெற்றியும் உண்மையில் ஒருபொருளே ஆயினும், தருக்க மதத் தார் அவைகளைப் பெரிதும் வேறுபட்ட பொருள்களாக வைத்து பரந்துபட்ட ஆராய்ச்சிகளால் நிறுவ முயல்வர். எனினும், அவை எல்லாம் சைவ சித்தாந்தத்திற்குச் சிறிதும் ஒவ்வாதன வாம். இவ்வாறு சிவமும், சத்தியும் ஒரு பொருளே என்பதனுல் 'சிவம் பெரிதோ ? சத்தி பெரிதோ ? என்ற ஆராய்ச்சிக்குச் சைவ சித்தாந்தத்திற் சிறிதும் இடம் இல்லை என்க,

மாணுக்கன் : குடம், ஆடை முதலிய பொருள்களில், முதலும் அவற்றது பெற்றியும் இரண்டுபோலக் காணப்படவில்லை; ஒன்ருய்த்தான் தோன்றுகின்றன. ஆதலின், முதலும் அதன் பெற்றியும் ஒருவாற்ருன் இரண்டாய்க் காணப்படுதல் எவ்வாறு?

ஆசிரியர் : குடம், ஆடை முதலியவற்றிலும் நுனித்து நோக்குமிடத்து அம்முதல்களும். அவற்றின் பெற்றிகளும் இரண்டாய்த் தோன்றுதல் காணலாம். அவற்றை அவ்வாறு கண்டே தருக்க மதத்தார் வாதிக்கின்றனர். எனினும், அங்ஙனம் காணப்படுதல் எளிதில் விளங்குதற்கு இரண்டு எடுத்துக்

காட்டுக்கள் உள: ஒன்று, கதிரவனும் அவன் கதிரும். மற்ருென்று விளக்கும் அதன் ஒளியும். கதிரவன் சேய்மையில் ஓரிடத்தில் உள்ளவனுய்க் காணப்பட, அவனது கதிர்கள் அண்மையில் எங்கும் உள்ளனவாய்க் காணப்படுகின்றன. விளக்கு இல்லத்தில் ஓரிடத்தில் இருப்பதாக, அதன் ஒளி இல்லம் முழுவதும் உளதா கின்றது. அதனுல் இவை, முதலும் அதனது ஒருவாற்ருன் இரண்டாய்க் காணப்படுதற்கு எடுத்துக்காட்டாகின்றன. ஆகவே சிவம் கதிரவன்போலும்; சத்தி கதிரவனது கதிர்கள் போலவும் ஆம் என்று உணர்க.

மாணுக்கன்: அங்ஙனமாயின் சிவம் ஒன்றேயாக அதன் சத்திகள் பலவோ ?

ஆசிரியர்: இல்லை. நெருப்பின் சத்தி ஒன்றே, அது செய்யும் செயல்பற்றி 'சுடும் சத்தி. அடும் சத்தி, விளக்கும், சத்தி எனப் பலவாருக வழங்கப்படுகின்றது. அதுபோலவே, சிவத்தினது சத்தி, பிறிதொன்றைத் தடுத்தலோ பிறிதொன்ருல் தடுக்கப் படுதலோ இல்லாத பேரறிவாகிய ஒன்றே. அதுவே 'அறிதல், விழைதல், செய்தல், என்னும் செயல் பற்றி,' ஞானசத்தி, இச்சா சத்தி, கிரியா சத்தி என்றும், மற்றும் படைத்தற்சத்தி, காத்தற் சத்தி முதலாகவும் பலவாறு வழங்கப்படுகின்றது என்பதை முன்பே கூறினேம். அதனைக் கடைப்பிடிக்க இன்னும் பகலவன் ஒருவனே, தன்னை நோக்கி நிற்குவ்வழி, 'கதிரவன்' என்றும், உலகப் பொருள்களை விளக்கும் வழி, 'கதிர்' என்றும் சொல்லப்படுதல்போல், முதற்பொருள் ஒன்றே தன்னை நோக்கி நிற்கும் வழி, 'சிவம் என்றும், உலகத்தை நோக்கி நிற்கும்வழி 'சத்தி' என்றும் சொல்லப்படும் என்பதும் உணர்ந்துகொள்க. இச் சத்தியினுலேதான் இறைவன் உலகத்திற்கு எவ்வகைச் செயலையும் செய்கின்ருன். என்க. (தொடரும்)

---


## குமரகுருபரன் ஆண்டுச் சந்தா 1 — 50

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல் வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பேயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்சேய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம்: நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A. B. L., அவர்கள்,
"குமரகுருபரன்" ஆபீஸ் ஸ்ரீவைகுண்டம்.

# சிவாகமத் தெளிவு

## சரியை

இறைவனால் கூறப்பட்ட சிவாகமங்களில் கூறப்படும் விதி நிஷேதங்களைக் கடைப்பிடித்து அதன்படி ஒழுகுதல் சரியை யாகும். சிவாகமங்களைப் படிப்பதற்கு சமயீ புத்ரகர்கள் தகுதி யுள்ளவர்களாவார்கள். சமய தீக்ஷை பெற்றவர் சமயீ எனப் படுவர். சமயிகள், பௌதிகர் என்றும் சிவாச்ரமிகள் என்று மிருதிறப்படுவார்கள். இவ்விருவர்களுக்கும் சதாசார தர்மம் ஒன்று.

பிறருடைய பொருளை விரும்புதல், பிறருக்கு தீங்கு நினைத் தல், செய்யத்தகாததைச் செய்தல். பொய் பேசுதல், தீய வழியில் செல்லுதல், பிரியமில்லாத வார்த்தை பேசுதல், பிறரை தூஷித்தல் கோள் சொல்லுதல், உண்ணக் கூடாததை உண்ணுதல், ப்ராணிஹிம்சை செய்தல், பரஸ்திரீகமனம் செய்தல், பரத்திர வியத்தை அபகரித்தல் என்பன மானசமாயும், வாசிகமாயும், காயிகமாயுமுள்ள பாபச்செயல்கள், ஆகவே இவைகளைச் செய்தல் கூடாது.

சிவாச்ரமிகளுக்குத் தொண்டு செய்தல், சிவனின் பொருட்டு புஷ்பத் தோட்டம் வைத்தல், சிவாலயத்தை மெழுகுதல் திரு வலகிடுதல், சிவதரிசனம் செய்தல், அடியார்கள் சேவை குருசுச்ரூஷை செய்தல் முதலியன செய்யத் தகுந்ததருமமாகும்.

இறைவன் உறைவிடமான சிவாலயப்பணி முக்கியமானது. சிவாலயம் இறைவனுடைய ஸ்தூலதேஹமாகும். ஆலயத்தை ஒரு புருஷ வடிவமாகக் கொண்டால் அதிலுள்ள கர்ப்பக்கிரஹம் தலையாகும். அர்த்தமண்டபம் கழுத்தாகும். மகாமண்டபம் மார்பாகும், யாகசாலை நாபியாகும், கோபுரம் பாதமாகும், இத் தகைய சிவாலயத்தினுள் சிவபெருமான் இலிங்கத் திருமேனி கொண்டு வீற்றிருக்கிறார்.

இலிங்கம், ஸ்தாவரம் ஜங்கமம் என இருவகைப்படும். இவையும் சைலஜம், ரத்னஜம், லோஹஜம் ம்ருண்மயம் என்று நான்கு பேதமாகும்.

சைலஜ லிங்கமானது, ஸ்வாயம்புவம், தேவிகம், தைவிகம், மானுஷம், ஆர்ஷம், ராக்ஷசம், பாணலிங்கம், என்று ஏழுவிதம்,

சுவாயம்புவ லிங்கமானது ரேகை முதலானது இல்லாததாய் கரடு முரடான திருமேனியுடையதாய் விளங்கும். குடந்தைக் கீழ்க்கோட்டம் காசி விச்வநாதர் போன்ற மூர்த்திகள்.

இதுபோல் காஞ்சீபுரத்தில் காமாக்ஷியம்மையால் பூசிக்கப்பட்ட ஏகாம்ரநாதலிங்கம் மாயூரத்தில் மயில் வடிவத்தில் அம்மையால் பூசிக்கப்பட்ட மாயூரநாதலிங்கம் போன்ற இலிங்கம் தேவிக லிங்கம்,

சீகாழியில் பிரமதேவனுல் பூசிக்கப்பட்ட பிரமபுரீச்வர மகாலிங்கம், திருமாற்பேற்றில் விஷ்ணு பூசித்த மால்வணங்கீச்வர மஹாலிங்கம். திருக்கண்ணுர்கோவிலில் இந்திரனுல் பூசிக்கப்பட்ட கண்ணுயிரேசுவர மகாலிங்கம் போன்றன தைவிக லிங்கங்களாம்.

திருக்குற்ருலத்தில் அகஸ்திய முனிவரால் ஸ்தாபித்துப் பூசிக்கப்பட்ட குறும்பலாவீச்வர மகாலிங்கம். திருக்கடவூரில் மார்க்கண்டமுனிவரால் பூசிக்கப்பட்ட அமிருதகடேச்வரலிங்கம் முதலியன ஆர்ஷலிங்கம். இடும்பாவனத்தில் இடும்பனுல் ஸ்தாபித்துப் பூசிக்கப்பட்ட சற்குணேச்வர மகாலிங்கம் போன்றன ராக்ஷச லிங்கம். திருஓணகாந்தன்றளியில் ஓணன் காந்தன் என்ற இரண்டு அசுரர்களால் பூசிக்கப்பட்ட ஓணகாந்தேச்வரமகாலிங்கம். திரிசிராமலேயில் திரிசிரச் என்ற அசுரனுல் பூசிக்கப்பட்ட தாயுமான லிங்கம் போன்றன ஆசுரலிங்கம். ராக்ஷசலிங்கம், ஆசுரலிங்கம் என்ற இரண்டும் ஒருவகை. இராமேச்வரத்தில் மானுடவேடம் தாங்கிய இராமனுல் ஸ்தாபித்துப் பூசிக்கப்பட்ட இராமலிங்கம் போன்றன மானுட லிங்கம்.

பாணலிங்கம் என்பது காணவலிங்கம் என்றும் சில அபியுக்த்தர்களால் கூறப்படுகிறது. நந்தி, பிருங்கி, விநாயகர், கந்தர் முதலியவர்கள் கணேச்வரர்கள் ஆவார்கள். இவர்களால் பூசிக்குப்பட்ட இலிங்கம் காணவம் என்று பெயர். அது. திருச்செங்காட்டங்குடியில் விநாயகர் ஸ்தாபித்துப் பூசித்த கணபதீச்

சர மகாலிங்கம் திருச்சேய்ஞ்லூரில் சுப்பிரமண்யசுவாமி ஸ்தாபித்துப் பூசித்த சத்திகிரீச்வர மகாலிங்கம் போன்றன காணவலிங்கம்.

பாணசுரன், என்ற அரசனனவன் பல சாஸ்திரங்களையும் பெரியோர் வாயிலாகக்கேட்டு வரும்பொழுது ஒரு தினம் சிவலிங்கத்தின் மகிமையைக் கேட்டான். கேட்டது முதல் சிவபூஜை செய்யவேண்டும் என்ற அன்பு மிகுதியால் சிவபெருமானை நோக்கி அநேக காலம் தவம் செய்தான். அத்தவத்திற்குச் சிவபெருமான் இரங்கி அவனுக்குத் தோன்றி என்னவரம் வேண்டும் என்று கேட்டான். அப்போது பாணசுரன் ஆயிரம் சிரசும் இரண்டாயிரம் கைகளும் இருப்பதினலும். சிவபூஜை செய்யவேண்டும் என்ற விருப்பமிருப்பதினலும். பதினன்கு லோகங்களையும் ஆளவேண்டும் என்று ஆசை யிருப்பதினலும், பதினன்குகோடி சிவலிங்கம் வேண்டும் என்று கேட்டான், அப்பொழுது சிவபெருமான் இமயமலேக்குச் சமீபமுள்ள கங்கைக் கரையிலிருந்து தம்முடைய பிரமத கணங்களைக் கொண்டு சிவலிங்கங்களை எடுத்துவரச்செய்து பாணசுரனுக்குக் கொடுத்து சிவபூஜை செய்யும்படி கட்டளையிட்டு மறைந்தார்.

பின்னர் பாணசுரன் அவ்வாறே சிவபூஜை செய்து அரச போகங்களை எல்லாம் அனேககோடி காலம் அனுபவித்தான். அதன் பின்னர் சிவபெருமானது திருவுள்ளப்படி அந்தப் பதினன்குகோடி சிவலிங்கங்களையும். ஸ்ரீ சைலத்திலும் கங்கா நதியின் மத்தியிலும் நீலகண்டம் நேபாளம் முதலிய முக்கிய தலங்களிலும் வைத்தான். அவைகள் பாணலிங்கங்களாகும்.

அவற்றில் ரேகையாகிய கீறலும், பிந்துவாகிய வட்டமும், களங்கமாகிய கறுப்பும். மிகுந்த கனமும், பல வர்ணங்களாகிய சித்ரங்களும் உச்சிக் குழியும் பருக்கைக் கல்லும், பக்கத் தழும்பும் வெடிப்பும் என்ற குற்றங்களில்லாமல் இலிங்கத்திற்கமைந்த ஆவுடையாளுடன் நீர்க்குமிழிபோல்கறுப்பாகவும், பார்வைக்குப் பிரியமாகவும் உள்ளதாய் விளங்கும் பாணலிங்கம் உத்தமோத்தமம்.

ஒரு சமயம் அனந்தன் என்ற நாகராஜனுடைய ஆயிரம் சிரசுகளும் அசைய அதில் கோபம்கொண்ட காலாக்னி ருத்ரனுடைய கோபாக்கினியினின்றும் மூன்று தீப்பொறிகள் உண்டாயின.

அந்தத் தீப்பொறிகள் மூன்றும் நிர்மூலம், சமூலம், உபயாத்மகம் என்ற பெயரால் மூன்று லிங்கங்களாகத் தோன்றின.

அவற்றுள் நிர்மூலம் என்பது ஜலத்தினுள்ளிருப்பது. சமூல லிங்கம் பூமியில் மலையை ஆதாரமாகக்கொண்டு விளங்குவது. ஏனையலிங்கம் மண் முதலியவைகளை ஆதாரமாகக்கொண்டது. இவ்வாறு சுவாயம்புவ லிங்கத்தினுடைய தோற்றம் கூறப்படுகிறது.

எங்கும் வியாபியாய் நிறைந்திருக்கின்ற இறைவன், பாலில் நெய்போல விளங்காது இருப்பினும், குருவிடத்திலும் சிவாலயத்திலும் சிவனடியாரிடத்திலும் தயிரில் நெய் போல் வெளிப்பட்டு விளங்கியருளுவர்.

"எங்குஞ் சிவனிருப்ப னுனலு மேசற்ற
சங்கமத்துஞ் சற்குருவின் றன்னிடத்தும் – லிங்கத்து
மாவினுடம் பெல்லாமு மாவரித்து நிற்கினும்பால்
பாவுமுலைக் கண்மிகுதிப் பார். —சிவப்பிரகாசவெண்பா.

गुकारस्त्वन्धकारस्स्यात् रुकारस्तन्निवर्तकः ।
अन्धकारनिरोधित्वाद्गुरुरित्यभिधीयते ॥

"குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய் கோனுமாய் நிற்குங்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே. —திருமந்திரம்.

என்ற வாக்கால் குருவே சிவ மெனப் பெறப் படுவதால் குரு வழிபாடு சிவவழிபாடாகும்.

"கு" என்பது அஞ்ஞானம் "ரு" என்பது அழித்தல் எனப் பொருள்தருவதால், குரு என்பதற்கு அஞ்ஞானத்தை அழித்து அனுக்கிரஹித்து சிவஞானத்தைக் கொடுப்பவர் என்று பொருள்.

சிவாலயத்தையும் சிவலிங்கத்தையும் சிவமெனவே கண்டு வழிபட்டவர் முத்தியடைந்ததுண்டாகையாலும், சிவாலயமும், சிவக்குறிகளும் சிவாலய பூஜாகாரியங்களும் மந்திர பூர்வகமாக இருத்தலாலும், மந்திரசாந்நித்யமுடைய சிவாலயம் சிவனை வழிபடுதற்குரிய இடமாகும்.

" திருக்கோயி லுள்ளிருக்கும் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவ னங்கே
யுருக்கோலி மந்திரத்தா லேநினையு மவர்க்கு
முளனெங்கு மிலனிங்கு முளனென் பார்க்கும்
விருப்பாய வடிவாகி யிந்தனத்தி னெரிபோன்
மந்திரத்தில் வந்துதித்து மிகுஞ்சுரபிக் கெங்கு
முருக்காண வொண்ணுத பான்முலைப்பால் விம்மி
யொழுகுவது போல்வெளிப் பட்டருளுவனன் பர்க்கே.

— சிவஞான சித்தியார்

குருவழிபாடு சிவலிங்க வழிபாடு போல சிவனடியார் வழிபாடும் சிவவழிபாடு போன்றதேயாகும்.

சிவனடியார்கள் சிவதீக்ஷாதி கிரியைகளால் சிவாகாரமுறுதலாலும், சிவபிரானைத் தியானித்துத் தியானித்துச் சிவனே என நிற்றலாலும், சிவோஹம் பாவனையால் சிவமாகவே விளங்கலாலும் சிவனடியார் வழிபாடு சிறந்தது.

அதிக நல்லற நிற்பதென் றறிந்தனை யறத்து
ளதிக மாஞ்சிவ புண்ணியஞ் சிவார்ச்சனை யவற்று
ளதிக மாஞ்சிவ பூசையு ளடியவர் பூசை
யதிகமென்றறிந் தன்பரை யருச்சனை செய்வாய் "

திருவிளையாடற்புராணம்.

இத்துணைப் பெருஞ் சிறப்பினதாகிய மாகேசுர பூசையை எந் நாளும் சிறிதாயினும் தவருது சைவாகம விதிப்படி மெய்யன் போடு செய்வதும் சிவவழிபாடாம். இவ்வாறு குருலிங்க சங்கம வழிபாட்டினுல் பேரின்பத்தைப் பெறலாம்.

மற்றும், சிவாலயத்தை மெழுகுதல், திருவலகிடுதல், புஷ்பம் எடுத்துக்கொடுத்தல், புஷ்ப மாலை கட்டிக்கொடுத்தல் முதலியவைகள் சரியைத் தொண்டாம்.

நிலைபெறுமா றெண்ணுதியே னெஞ்செ நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்மு னலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்று
மலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதீஎன்றும்
ஆரூரா வென்றென்றே யலரு நில்லே " — அப்பர்.

" निर्गन्धान्युग्रगन्धानि कुसुमानि विवर्जयेत् "

வாசனையற்ற பூக்களும் கடுமையான வாசனையுள்ள பூக்களும் கூடா. மற்றும் தீக்ஷையில்லாதான் இழிகுலத்தான். மிகு நோயாளன், தூர்த்தன், ஆசாரமில்லாதவன். ஆசௌசமுடையான் என்னும் இவர்கள் கொண்டுவரும்பூ, எடுத்துவைத்து அலர்ந்தபூ, பழம்பூ, உதிர்ந்த பூ, கையிலேனும் உடுத்தபுடைவையிலேனும் எருக்கிலை ஆமணக்கிலைகளிலேனும் வைத்தபூ. அரையின் கீழே பிடித்தபூ, புழுக்கடி, எச்சம் சிலந்திநூல். மயிர் என்னும் இவற்றோடு கூடியபூ, ஸ்நானம்பண்ணாமல் எடுத்தபூ, பொல்லா நிலம், மயானசமீபம், சண்டாளர் வசிக்கும் இடம் முதலிய அசுத்தஸ்தானங்களில் உண்டாகிய பூ, இரவில் எடுத்த பூ இவைகள் சிவனுக்குச் சாத்தலாகா.

எடுத்துவைத்தே யலர்ந்தமலர் பழம்பூக்கண் மற்ற
வெருக்கிலையா மணக்கிலையிற் பொதிந்த பூக்க
ளுடுத்தபுடை வையிற்கரத்தி னமைந்தநறுஞ்சிலந்தி
மயிருறுத
லங்கையில்வைத் தங்கைகுவித் திடுதல் கங்குறனிலே
யெடுத்த மலர்நிர மிழ்த்தல் புறங்காட்டி லெய்த
லெச்சில்குளி யாதெடுத்த விழிபெனுமா கமமே.

மடியினின் பறித்திடும்பூ மலர்ந்துகீழ் விழும்பூ முன்னு
ளெடுபடு மலரி ளம்பூ விரவினி லெடுத்தி டும்பூ
தொடர்நோயன் றீக்கை யில்லான் றூர்த்தனு சார மற்றோன்
கொடுவரும் பூ வனைத்துங் குழகனுக் காகா வன்றே.

ஞானப்ப்ரகாச தேசிகர் புஷ்பவிதி.

ஆகவே நாடோறும் சூரியன் உதிக்குமுன் எழுந்து, ஸ்நானம் செய்து, தோய்த்து உலர்ந்த வஸ்திரம் தரித்து, அனுஷ்டானம் முடித்துக்கொண்டு, சுத்தி செய்யப்பட்டு நாபியின்கீழ்ச் செல்லாது மேலே உயர்த்த கைகளை உடையராய், திருப்பூங்கூடையை எடுத்துக்கொண்டு சிவனது திருவடியிலன்றிப் பிறிதொன்றிலும் சிறிதும் இறங்காத சிந்தையோடு மௌனம் பொருந்திச் சென்று, பத்திர புஷ்பங்கள் கொய்து, திருப்பூங்கூடையில் இட்டுக்கொண்டு, சுத்திசெய்யப்பட்ட காலினையுடையராய், புஷ்ப மண்டபத்திற் புகுந்து, விதிப்படி சுத்தி செய்யப்பட்ட பூக்குறட்டில் வைத்து, இண்டை முதலிய திருமாலைகளைக்கட்டி இறைவனுக்கு அர்ப்பணம் செய்ய வேண்டும்.

வெள்ளை ஊமத்தம்பூ, வெள்ளை அரளி, பிச்சி, சிறு செண்பகம் மகிழம்பூ, வெள்ளை மந்தாரை, வெண்டாமரை, வெள்ளைக் கொக்கிறகம்பூ, புன்னை, மருதாணி, வெள்ளெருக்கு. நந்தியாவர்த்தம், மல்லிகை, குடமல்லிகை, தும்பை, முதலான வெள்ளைப் புஷ்பங்களைத்துஞ் சாத்துவித புஷ்பங்களாகும், இவற்றால் சிவபெருமானை அர்ச்சித்தால் முக்தியுண்டாகும். செங்கழுநீர், செந்தாமரை, செவ்வலரி, சிவந்தபட்டி, சிவந்தபாதிரி, சிவந்த பலாசம், செங்கடம்பு, முதலிய சிவந்த புஷ்பங்களைத்தும் இராசத புஷ்பங்களாகும். இவற்றால் சிவபெருமானை அருச்சித்தால் போகமுண்டாம்.

கொன்றை, சண்பகம், பொன்னூமத்தை, கர்ணிகாரம், முதலான பொன்மயமான புஷ்பங்களைத்தும் ராஜசசாத்விக புஷ்பங்களாகையால், இதனால் பூசித்தால், போகமோக்ஷமுண்டாகும். கருநிறப் புஷ்பங்கள் தாமச புஷ்பங்களாகையால் விசேஷமன்று. நீலோத்பல புஷ்பம் சிறந்தது. (சைவபூஷணம்).

பத்திரங்களிலும் வில்வம், பச்சை, துளசி, வெட்டிவேர், மருக்கொழுந்து, அருகு, கதிர்ப்பச்சை முதலியவைகளின் அருச்சனையினால் போகமோக்ஷமுண்டாகும்.

नार्चयेदक्षतैर्विष्णुं न तुलस्या विनायकम् ।
नदूर्वया महेशानीं न केतक्या महेश्वरम् ॥

அக்ஷதையால்மகாவிஷ்ணுவையும், துளசியினால், விநாயகரையும், அறுகினால் தேவியையும், தாழம்பூவினால், சிவனையும் பூசிக்கக் கூடாது.

இறைவன், கோபுரம், த்வாரம், சிகரம், ப்ராஸாதம், பலிபீடம், அர்ச்சகன் மூலலிங்கம் என்ற விடங்களில் எப்பொழுதும் பிரசன்னமாக இருப்பதால், இவைகளைப் பார்த்த மாத்திரையில் அஞ்சலிகூப்பி வணங்க வேண்டும். சிவாலய தரிசனம் மக்களுக்கு இன்றியமையாதது.

धिक् भस्मरहितं फालं धिक् ग्राममशिवालयम् ।
धिगनीशार्चनं जन्म धिग्विद्यामशिवाश्रयाम् ॥

விபூதியில்லாத நெற்றி வீண். சிவாலயமில்லாத ஊர் வீண் ஈசனைப் பூசிக்காத ஜன்மா வீண். சிவனைக் கூறாத வித்தை வீண் ஆகவே, சிவாலய தரிசனம், புத்தி முத்திக்குச் சாதனம்.

(தொடரும்.)

# அமராபரணன் சீயகங்கன்

திரு. K. M. வேங்கடராமையா, M. A., B. O L.,

**கங்கர்கள் :**

**இந்நாளைய மைசூர்ப் பகுதியை ஆண்ட முன்னாளைய குறுநில மன்னர்கள் கங்கர்கள் என்று கூறப்பெறுவர். அன்னேர் கி. பி. மூன்று நான்காம் நூற்றுண்டு முதற்கொண்டு வரலாற்றில் குறிக்கப்பெறுகிருர்கள். பல்லவர் ஆட்சிக்காலத்தில் ஒரு சமயத்தில் பல்லவர் பக்கமுமாக இருந்தவர்கள். பெரும்பாலும் இவர்கள் மேலைச் சாளுக்கியர்களுக்கு அடங்கியவர்களாகக் காணப்படுகின்றனர். சோழவரசர்கள் உயர்நிலையில் இருந்த பொழுது சோழர்களுக்கு அடங்கிய சிற்றரசர்களாகவே இவர்கள் காணப்படுகின்றனர். சீயகங்கன் என்ற பெயருடையான் முதற்குலோத்துங்க சோழன் காலத்திலும் ஒருவன் இருந்தான்; இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்திலும் ஒருவன் இருந்தான்; இவ்விருவரும் சிறந்த சிவபக்தர்களாகவே காணப்படுகின்றனர்.**

**அமராபரணன் சீயகங்கன் :**

**மேற்குறித்த இருசீயகங்கரின் வழிவந்தவனும், கங்கமரபைச் சேர்ந்தவனும் மூன்ரும் குலோத்துங்க சோழன் காலத்தில் அவனுக்கடங்கிய குறுநில மன்னஞக விளங்கியவனுமாகியவனே அமராபரணன் சீயகங்கன். இற்றைநாளில் 'கோலார்' என்று கூறப்படும் குவளாலபுரம் இவனுடைய தலைநகரமாகும். வட ஆர்க்காடு மாவட்டம் திருவல்லத்தில் காணப்படும் கல்வெட்டில்:**

**" ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு முப்பத்து நாலாவது அமராபரணன் சீயகங்கன் நம்பிராட்டியாரான அரிய பிள்ளை திருவல்லமுடைய நாயனுர்க்கு வைத்த சந்தி விளக்கொன்றும் "** (M. E. R. No. 446 of 1912 S. I. I. Vol III No. 62) **என்றும்,**

**காஞ்சிபுரத்து ஏகாம்பரநாதர் கோயிலில் கண்ட குலோத்துங்கனின் (III) 27-ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில்,**

"ஸ்ரீமத் குவளாலபுர பரமேஸ்வரன் கங்க குலோற்பவந் சிய்யகங்கன் அமராபரணனன திருவேகம்பமுடையான் வைத்த திருநுந்தா விளக்கு ஒன்றுக்குப் பசு முப்பத்திரெண்டு ரிஷபம் ஒன்று" 10 of 1893. S. I. I. Vol. IV No. 823) என்றும்,

திருக்காளத்தியிலுள்ள மூன்றும் குலோத்துங்கனுடைய மூன்றும் ஆட்சியாண்டுக் கல்வெட்டில்,

"குவளாலபுர பரமேஸ்வர சீயகங்கரான சூரநாயகர்" 195 of 1892. Vol. IV 643) என்றும்,

திருக்களாத்தியிலுள்ள மூன்றும் குலோத்துங்க சோழனின் 34ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில்,

"உடையார் திருக்காளத்தியுடையார்க்குக் குவளாலபுர பரமேஸ்வரன் கங்ககுலோத்தமன் சூரநாயகன் திருவேகம்ப முடையானன அமராபரணன் சீயகங்கன்" (116 of 1922) என்றும் காணப்படும் பகுதிகளிலிருந்து சீயகங்கன் என்ற இக் குறுநில மன்னனைப்பற்றி அறியவருகிறது. மேற்கண்ட கல் வெட்டுக்களிலிருந்து இச்சீயகங்கனுக்கு இயற்பெயர் திருவே கம்பமுடையான் என்பது என்றும், சூரநாயகன் அமராபரணன் என்பன இவனுக்குரிய சிறப்புப் பெயர்கள் என்றும் அறியலாம். இச்சியகங்களின் கல்வெட்டுக்கள் மூன்றும் குலோத்துங்க சோழனின் மூன்றும் ஆட்சியாண்டு முதல் முப்பத்து நான்காம் ஆட்சியாண்டு முடியத் தமிழகத்தில் காணப்படுகின்றன.

பவணந்தி முனிவர் :

அமராபரணன் சீயகங்கன் காலத்தவரே பவணந்தி முனிவ ராவர். பவணந்தி முனிவர் இவ்வரசன் வேண்டுகோட்படியே நன்னூலை இயற்றினரென்பது அந்நன்னூற் சிறப்புப் பாயிரத் தால் அறிந்ததாகும்,

"குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனுநான் கெல்லையின் இருந்தமிழ்க் கடலுள்
அரும்பொருள் ஐந்தையும் யாவரும் உணரத்
தொகைவகை விரியில் தருகெனத் துன்னூர்
இகலற நூறி இருநில முழுவதும்
தனதெனக் கோலித் தன்மத வாரணம்
திசைதொறும் நிறுவிய திறலுறு தொல்சீர்க்

கருங்கழல் வெண்குடைக் கார்நிகர் வண்கைத்
திருந்திய செங்கோல் சீய கங்கன்
அருங்கலை விநோதன் அமரா பரணன்
மொழிந்தன னாக ... ..."

என்பன அச்சிறப்புப்பாயிரவடிகள். பல்கலைக் குரிசில் பவணந்தி என்னும் புலவர் பெருமான் சனகாபுரத்தவர். இச்சிறப்புப் பாயிரத்துப்,

" பொன்மதிற் சனகைச் சன்மதி முனியருள்
பன்னருஞ் சிறப்பின் பவணந்தி ..."

என்ற அடிகள் தெளிவுப்படுத்துகின்றன. சனகாபுரம் (சனகை) என்பது மைசூர் மாவட்டம் திருமுக்கூடல் நரசிபுரம் தாலுகாவிலுள்ள சனநாதபுரம் ஆகும். (திரு பண்டாரத்தார் - சோழர் சரித்திரம், பாகம் 2 பக்கம் 116) பவணந்தி முனிவர் சமணர் என்பது யாவரும் அறிந்ததே.

சீயகங்கனின் மனைவி :

மேலே குறித்த திருவல்லத்துச் சாசனம் இவனது மனைவியின் பெயர் அரிய பிள்ளை என்று பகரும். இவள் மூன்றும் குலோத்துங்க சோழனுடைய 34-ம் ஆட்சி யாண்டில் (கி. பி 12122) திருவல்லத்திலுள்ள சிவன் கோயிலுக்குத் திருவிளக்கு வைக்க நிபந்தம் அளித்துள்ளனள்.

சீயகங்கனின் மக்கள் :

இவனுடைய மகன் அருங்குன்றைப் பிள்ளையாரான செயகங்கர் (சீயகங்கர்) என்ற பெயருடையவன். அவன் திருக்காளத்தி ஈசர்க்குத் திருநுந்தா விளக்கு வைக்க 32 பசுக்கள் அளித்தனன். அருங்குன்றைப் பிள்ளைக்கு ஒரு தங்கை இருந்தாள் என்றும், அவள் வடவாயில் செல்வியாரான சந்திரகுல மாதேவியார் என்ற பெயருடையவள் என்றும் பிற்குறித்த கல்வெட்டினின்று அறியலாம் :-

" ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு மூன்றுவது உடையார் திருக்காளத்தியுடையார்க்குக் குவளாலபுர பரமேஸ்வரர் சீயகங்கரான சூர நாயகர் மகள், வடவாயில் செல்வியாரான சந்திரகுல மாதேவி

யார் தமையனுர் அருங்குன்றைப் பிள்ளையாரான செயகங்கர் திருநுந்தா விளக்கு ஒன்றுக்கு விட்ட சாவாமூவாப்பசு முப்பத்திரெண்டு" (195 of 1892 vol. IV No. 643).

முடிப்புரை :

இதுகாறும் கூறியவாற்ருன் இக்கங்கர் மரபினர் சிறந்த சிவபக்தி உடையவர்களாய் இருந்தனர் என்றும், சிறந்த தமிழ்ப் பற்று வாய்ந்தவர்களாய் விளங்கினர் என்றும் தெரியவருகிறது.

> '' முன்னூல் ஒழியப் பின்னூல் பலவினுள்
> எந்நூ லாரும் நன்னூ லாருக்(கு)
> இணையோ என்னும் துணிவே மன்னுக ''

என்று இலக்கணக்கொத்து ஆசிரியர் போற்றும் பெருமை வாய்ந்த நன்னூலை இயற்றுவித்த அருங்கலை விநோதனுகிய சீயகங்கனைப் போற்றும் முறையில் நன்னூலைக் கசடறக் கற்று ''மொழித்திறன் முட்டறுத்து முதனூற் பொருளுணர்ந்து'' தமிழ் மாணுக்கர் விளங்குவாராக !

---

## விசேஷ நாட்கள்

### குரோதிஸு பங்குனிமீ

| | |
|---|---|
| 13—3—65 | இரவு காரடையான் நோன்பு |
| 17—3—65 | பங்குனி உத்தரம் |
| 19—3—65 | குருப்பெயர்ச்சி |
| 20—3—65 | காரைக்கால் அம்மையார் திருநக்ஷத்திரம் |
| 30—3—65 | தண்டியடிகள் திருநக்ஷத்திரம் |
| 2—4—65 | வசந்த நவராத்திரி ஆரம்பம், யுகாதிப்பண்டிகை தெலுங்கு வருஷப்பிறப்பு |
| 5—4—65 | வேளூர் கிருத்திகை |
| 6—4—65 | நேசநாயனுர் திருநக்ஷத்திரம் |
| 8—4—65 | கணநாத நாயனுர் திருநக்ஷத்திரம் |
| 10—4—65 | முனையாடுவார் திருநக்ஷத்திரம், ஸ்ரீ ராமநவமி |

# வளைகுளம் என்னும் வைப்புத் தலம்

" கல்வெட்டாராய்ச்சிக் கலைஞர் "
வித்துவான். திரு. வை. சுந்தரேச வாண்டையார்
திருவையாறு.

சைவ சமய குரவர்கள் நால்வராலும், அல்லது அவர்கள் ஒவ்வொருவராலும், தனிப் பதிகம் பெற்றுள்ள சிவத் தலங்கள் பாடல் பெற்ற தலங்கள் என்றும், அவ்வாறு தனிப் பதிகமின்றிப் பொதுப் பதிகங்களிலேனும், வேறொரு தனிப் பதிகங்களினிடையிலேனும் வைத்துக் கூறியிருப்பவை வைப்புத் தலங்களென்றும் கூறப்படும்.

இத்தகைய வைப்புத் தலங்களில் இக்காலத்தில் பண்டைப் பெயர் சிதைந்தனவும், யாண்டுள என அறிதற்கும் இயலாதிருப்பனவும் பலவுள. அவற்றை அறிந்துகொள்வதற்குக் கல்வெட்டுக்கள் உதவி செய்கின்றன. திருநாவுக்கரசு சுவாமிகளது அடைவு திருத்தாண்டகத்தில் உள்ள,

" நள்ளாறும் பழையாறுங் கோட்டாற் றோடு
நலந்திகழும் நாலாறுந் திருவை யாறுந்
தெள்ளாறும் வளைகுளமுந் தளிக்கு ளமுநல்
லிடைக் குளமுந் திருக்குளத்தோ டஞ்சைக்களம்
விள்ளாத நெடுங்களம் வேட்களம் நெல்லிக்கா
கோலக்கா ஆனைக்கா வியன்கோ டிகா
கள்ளார்ந்த கொன்றையான் நின்ற ஆறுங்
குளம்களம்கா என அனைத்துங் கூறு வோமே "

என்னும் திருப்பாட்டால், வளைகுளம் என்னும் வைப்புத் தலம் உளது என்று பெறப்படுகின்றது. அது யாண்டையதென ஆராய்வுழி தென்னார்க்காடு ஜில்லா சிதம்பரந் தாலுகாவில் வீராணத்து ஏரியின் ( வீரநாராயணன் ஏரியின் ) மேல் கரையில் புடையூர் என்னும் ஊரின் மேல்பால் உள்ள பழமை வாய்ந்த சிவன் கோயிலே வளைகுளம் எனத் தெற்றெனப் பெறப்படுகின்றது. அக் கோயில் கோபுர வாசலின் வடப்பக்கத்து அருகாலில் செதுக்கப்பட்டுள்ள,

"ஏற்ற வருமோ யீசன்யிட்டதே அல்லாமற்
சாற்று மனமே சலியாதே—போற்றி
வளைகுளத்தி லீசனென்றே வாழ்த்து பலகாலு
நீள நினைத்த தெல்லாமுண் டாம(ா)ல்"

என்னும் பாடலும், கர்ப்ப இல்லின் வடபுறச் சுவரில் உள்ள,

"புடவூர் கோயில் தானத் தாற்கும்
பேரு ருடையார் கனதரா யர்க்கும்
சிறுமுறி புடவூர் உடையஊர் திருவளை
குளம் முடைய மகாதேவர்"

என்னும் கல்வெட்டுப் பகுதியும், இக் கோயில் வளைகுளம் என்ப தற்குச் சான்றுகளாகும்.

சைவ சமய குரவர்கள் எந்த ஊரை வழிபாடாற்றினுர்களோ அந்த ஊரின் பெயரை அல்லது அவ்வூரிலுள்ள கோயிலின் திருப்பெயரை அவ்வவ்வூரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்கு இட்டு வழங்கிவந்துள்ளனர். அப் பரமாசாரியர்கள் காலத்துக்குப் பிற்பட்ட கல்வெட்டுக்களிலும் அம் முறையே கையாளப்பட்டுள்ளது. அதன்படி இங்கு இறைவரின் திருப்பெயர் வளைகுளமுடைய மகாதேவர் என்றே கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டிருப்பது நோக்குதற்கு உரியதாகும்.

இக்கோயில் இக்காலம் கர்ப்பஇல், அர்த்தமண்டபம் என்னும் இரு பகுதிகளை உடையதாய்த் திகழ்கின்றது. மிக இடிந்த நிலையில் கோபுரம் ஒன்று வாயிலின் முன்பக்கத்தில் உள்ளது. அர்த்தமண்டபத்து வாசலின் தென்புறச்சுவர், வடபுறச் சுவர்களில் ஆறுசாண் நீளமுள்ள கொடுங்கைகள் வைத்துக் கட்டப்பட்டுள்ளன. இக் கொடுங்கைகளின் நுண்ணிய வேலைப்பாடுகள் திருப்பெருந்துறைக் கோயில் கொடுங்கைகளைக் காட்டிலும் மிகமிகச் சிறந்தவை. கண்டார் வியக்கும் தன்மையுடையவை. இத்தகைய வேலைப்பாடுடைய கொடுங்கை இந்த அர்த்தமண்டபத்தின் வடபுறச் சுவரிலும் இருக்கின்றது. மற்றெரு கொடுங்கை திருக்கோயிலின் வடகீழ்ப்புறத்தில் தனியே கிடக்கின்றது. இக்கோயில் கர்ப்ப இல்லின் தென்புறத்தில் அறம் உரைத்த நாயனர் (தட்சிணமூர்த்தி)த் திருமேனி கல்லால நீழற்கீழ் எழுந்தருளுவிக்கப்பட்டுள்ளது. அக் கல்லால மரத்தில் கிளி, குரங்கு, பல்லி முதலானவைகளின் உருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன. இங்குச் சனகர் முதலான நான்கு இருடிகளின் பிரதிமங்களும் இருக்கின்றன. கர்ப்பஇல்லின் மேல்புறச் சுவரின் நடுப்பகுதியில் இலிங்கோற்பவரின் திருமேனியும் கர்ப்ப

இல்லின் வடபுறச் சுவரில் பிரமதேவரின் திருமேனியும் இருக்கின்றன. அர்த்தமண்டபத்து வாசலடியில் துவாரபாலகர்கள் காணப்படவில்லை. அர்த்தமண்டபத்து வாசலின் வடகீழ்ப் பாகத்தில் ஆறுமுகத்துடன் கூடிய முருகப்பெருமான் தெய்வயானை அம்மையாரோடு மாத்திரம் எழுந்தருளியிருக்கும் கற்சிலை ஒன்று இருக்கின்றது. இம் மண்டபத்திலே அம்மன் திருமேனியும் எழுந்தருளுவிக்கப்பட்டுள்ளது. அம்மன்கோயில் தனியே இருந்து இடிந்து போயிருக்கவேண்டும். மகிஷாசுரன் தலையுடன் கூடிய பீடம் ஒன்று தனியே கிடக்கின்றது. எனவே துர்க்கையம்மன் திருமேனியும் இருந்திருத்தல் வேண்டும். மகா மண்டபத்தின் வெளிப்புறச் சுவரிலும் கோபுரத்தின் அடிப்பாகத்தைச் சுற்றிலும் பரதநாட்டியங்களின் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

கர்ப்பஇல்லின் மேற்குப்புறத்து மேல் வரிசையாகிய யாளி வரிசையில் திருமால் பள்ளிகொண்டிருப்பதும் அங்கு அவரது திருவடியின்பக்கத்தில் குரங்கு ஒன்று இருப்பதுமாகிய சிற்பங்கள் செதுக்கப்பட்டு இருக்கின்றன. எனவே இத்தலம் குரங்கால் பூசிக்கப்பட்டிருக்கவேண்டுமென்று எண்ணுகின்றேன்.

இக்கோயிலைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் குளங்கள் சூழ்ந்திருக்கின்றன.

இக் கோயிலில் உள்ள சோழமன்னர்கள் கல்வெட்டுக்களில் விக்கிரமசோழன் கல்வெட்டு ஒன்று இருக்கின்றது. அது பெரும்பான்மையும் சிதைந்துவிட்டது. மெய்க்கீர்த்திப் பகுதியிலுள்ள 'சக்கரக் கோட்டத்து' 'விக்கிரம', 'அயில்நுனை' என்னும் பகுதிகளால் அக்கல்வெட்டு விக்கிரம சோழனுடையதைப் புலப்படுத்தும்.

இக்கோயிலுக்குச் சிதம்பரத்திலிருந்து சேத்தியாத்தோப்பு வழி கும்பகோணம் செல்லும் மோட்டாரில் சோழத்தரம் என்னும் ஊரில் இறங்கித் தென்கிழக்கே ஒருமைல் தூரத்தில் செல்லலாம். அல்லது சிதம்பரத்திலிருந்து புத்தூர்ரோடு வழி, கலியமலை (கல்லியூர்மூலை) சென்றால் அங்கிருந்து ஓடத்தின் வழி புடலூரை அடையலாம்.

முதல்முதலாக இந்த வைப்புத்தலத்தைக் கண்டுபிடித்து எழுதும் பேறு எனது அருமை நண்பர், சிதம்பரந்தாலூகா இராதாநல்லூர், திரு. சீநிவாசப்பிள்ளை மகனார், திரு. S. பழமலைப் பிள்ளை அவர்களின் உதவியால் கிடைத்தது. அவர்கட்கு என் நன்றி உரியது.

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தின்

## பதினோராவது ஆண்டு நிறைவு விழாவில்

முதலமைச்சர்

# கனம். திரு. M. பக்தவத்சலம் B. A., B. L., அவர்கள்

ஆற்றிய

# தலைமை உரை

தம்பிரான் சுவாமிகளே! பெரியோர்களே! இந்த சமயப் பிரசார நிலையத்தில் பதினோராவது ஆண்டு நிறைவு விழாவில் அறிஞர்கள் பேச இருக்கிறார்கள். அவற்றை முற்றிலும் இருந்து கேட்க எனக்கும் ஆசைதான். தவிர்க்கமுடியாத சில வேலைகளால் முழுதும் இருந்து உங்களுடன் கலந்துகொள்ள இயலாதவனாக இருக்கிறேன். ரஷ்ய கலைஞர்களை வரவேற்கும் விழா ஒன்றில் கலந்து கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் ஆசி அனுப்பியிருக்கிறார்கள். அதுபோல் எனது வாழ்த்துக்களையும் இந்நிலையத்தாருக்கு தெரிவித்துப்போகவே சிறிது நேரமேனும் வந்து போகவேண்டும் என்று வந்தேன். குழந்தைகள் நிகழ்த்திய உரையாடலில் இந்த நிலையம் ஆற்றி வரும் சேவைகளை விளக்கினார்கள். தேவாரம், திருப்புகழ் வகுப்புக்கள், தமிழ் வித்வான்கள் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. பலரும் இலக்கியத் துறையிலும், பக்தித் துறையிலும் ஈடுபட இந்த நிலையம் துணை புரிகிறது. முதலில் இந்த நிலையம் இங்கு அமைக்கப்பட்டபோது கிராமங்களில் எல்லாம் அமைக்காது ஏன் இங்கு அமைக்க வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் அவசியம் என்பதை இப்பொழுது உணர்கிறேன். கிராமப் பகுதிகளில் இம்மாதிரி விழா என்றால் நிரம்ப மக்கள் கலந்து கொள்கிறார்கள். சென்னையைப் போன்ற நகரங்களில் இம்மாதிரி இடங்களில் சமயப் பிரசாரம் அவசியம் தேவை. நாமெல்லாம் வாழப்பிறந்தவர்களே. நன்றாக வாழவேண்டும், நன்றாக வாழப் பொருள் தேவைப்படுகிறது. பொருள் இருந்தால் மட்டும் வாழ்க்கை நன்றாக அமைந்துவிடாது. சீரிய சிறந்த வாழ்வை அமைத்துக் கொடுப்பது சமயம். அறிவு தெளிவில்லாதவர்களும் பக்தி செலுத்துகிறார்கள் கடவுளிடத்தில். அது மூட பக்தி. அது நிலைக்காது. அதனால் சிறப்புமில்லை. புரிந்து பக்தி செய்ய வேண்டும். கடவுள் யார்? நாம் யார்? நமக்கும்

கடவுளுக்கும் என்ன தொடர்பு என்று அறிந்து பக்தி செய்வதே சிறந்த பக்தி - நிலையானது. சமயம் என்ருல் நான் படித்த காலத்தில் ஆசிரியர்கள் சமயத்தின் சாரத்தைச் சுருக்கமாகச் சொல்லுவார்கள். அம்மாதிரி இங்கு நடைபெறும் ஒவ்வொரு விழாவிலும் சமயத் தத்துவங்களைப்பற்றி தக்க அறிஞர்களைக் கொண்டு விளக்கம் சொல்லுகிருர்கள். பிரசுரங்கள் வாயிலாக வும் அவ்வப்போது விளக்கம் தருகிருர்கள். இது மிகவும் பாராட்டத்தக்கது. புனித ஸ்தலங்களுக்குப் போகிருர்கள். பல அன்பர்களையும் யாத்திரையில் ஈடுபடுத்துகிருர்கள். ஸ்தலங் களைப் பார்க்கும் வாய்ப்பு பொது வாழ்விஞல்தான் எனக்குக் கிடைத்தது. ஸ்தலங்களுக்குப் போனுல்தான் நமது முன்னேர் களின் அறிவாற்றலும், திறமையும், பக்தியும், பண்பும் நமக்குத் தெரிகின்றன. சமஸ்கிருதம், தமிழ் முதலிய பல வகுப்புக்கள் நடத்துகிருர்கள், அவை சமஸ்கிருத, தமிழ் இலக்கியங்களை உணர்ந்துகொள்ள வாய்ப்பாகும். இன்று இந்த நிலைய ஆண்டு விழாவில் கலந்துகொள்ள அழைத்திருக்கிறீர்கள். மிக்க மகிழ்ச்சியோடு கலந்து கொள்கிறேன். இந்த நிலையத்தை சென்னை மக்கள் பலரும் பயன்படுத்தும்படியாகச் செய்ய வேண்டும். நிலையத்தாருக்கும் உங்கள் எல்லோருக்கும் எனது நன்றி.

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

Sri Sivalogathiagarajaswami Devasthanam, Achalpuram.

திருவெண்ணீற்றுமை அம்பாளுடன் கூடிய ஸ்ரீ சிவலோகத் தியாகேசுரர் திருக்கோயிலுக்கு இன்று வந்து வழிபாடுசெய்யும் பேறுபெற்றேன். திருக்கோயில் முழுவதும் மிகத் தூய்மையாக வும், அழகாகவும் பேணப்பெற்றிருப்பது மிக்க இன்பம் தருவ தாக உள்ளது. வழிபாட்டிற்கு, வரும் தொண்டர்களைத் திருக் கோயில் அலுவற் பொறுப்பாளர்கள் அன்புடன் வரவேற்று ஆவன செய்வது பாராட்டுதற்குரியது. இதற்கு முதற்காரண ராகிய தருமை ஆதீனத்தலைவர் அவர்களுக்குத் தொண்டர்களின் வணக்கம் உரியதாகும்.

(Sd.) லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்,
தமிழ்ப் பேராசிரியர் (ஓரியண்டல்)
18—2—65. அண்ணமலைப் பல்கலைக்கழகம்.

# செய்திகள்

திருக்குவளையில் :

## நெல்மகோற்சவம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் நெல் மகோற்சவம் 14—2—65 ஞாயிற்றுக்கிழமை முதல் 18—2—65 முடிய உள்ள நாட்களில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழா சைவசமயாசாரியர்களுள் சுந்தரமூர்த்தி சுவாமிகள் குண்டையூரில் உள்ள நெல்மலையைத் திருவாரூருக்கு எடுத்துச்செல்ல பெருமானிடம் ஆள்வேண்டிப் பதிகம் பாடி. பெருமான் ஆணையிட்டருளியவாறு பூதகணங்கள் நெல் மலையைத் திருவாரூரில் சேர்த்த வரலாறு பக்த உற்சவமாக நடைபெறுகிறது.

இவ்விழாவையொட்டி சொற்பொழிவுகள் நடைபெற்றன. 16—2—65 செவ்வாய்க்கிழமையன்று நாகப்பட்டினம் தேசிய உயர்பள்ளித் தமிழாசிரியர், தருமையாதீனப் புலவர், வித்துவான் திரு. வை. மு. சண்முகதேசிகர் ‘சுந்தரர்’ என்ற தலைப்பிலும் 17—2—65 புதன்கிழமை திருவாரூர் உயர்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான். திரு. மு. இரத்தினதேசிகர் ‘குண்டையூர்க் கிழார்’ என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர்.

தருமையாதீன தேவஸ்தானங்களில்

## பங்குனித்திங்கட் பெருவிழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம், திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானம், பேரளம் ஸ்ரீ சுயம்புநாதசுவாமி தேவஸ்தானங்களின் பங்குனித் திங்கட் பெருவிழா குரோதி ஆண்டு மாசித்திங்கள் 25ஆம் நாள்

(8—3—65) திங்கட்கிழமை தொடங்கி, பங்குனித்திங்கள் 4ஆம் நாள் (17—3—65) புதன்கிழமை முடிய உள்ள நாட்களில் சிறந்தமுறையில் நடைபெறுகிறது.

வேளூரில் 12—3—65 வெள்ளிக்கிழமையன்று ஸ்ரீ வைத்திய நாதசுவாமியை, ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி பூஜித்து செண்டு பெறுவதாகிய சிறப்புவிழாவும் 14, 15—3—65 ஆகிய நாட்களில் திருத்தேர்ப் பெருவிழாவும், 17—3—65 அன்று சித்தாமிர்த தீர்த்தத்தில் தீர்த்தங் கொடுத்தருளல் ஆகிய சிறப்பு விழாவும் நடைபெறும்.

திருபுவனத்தில் 12—3—65ஆம் நாள் பெருமான் தன்னைத் தான் அர்ச்சித்தலும், 14—3—65 ஆம் நாள் திருக்கல்யாண மும் 16—3—65அன்று திருத்தேர்த் திருவிழாவும், 17—3—65 அன்று தீர்த்தங் கொடுத்தலும், 19—3—65 வெள்ளிக்கிழமை சரபேஸ்வரர் சிறப்புத் திருவிழாவும் நடைபெறும்.

பேரளத்தில் 14—3—65 அன்று திருக்கல்யாணமும், 15—3—65 பாரி வேட்டைக்காட்சியும், 16—3—65, திருத்தேர்ப் பெருவிழாவும், 17—3—65 தீர்த்தப் பெருவிழாவும் நடைபெறும்.

விழா நாட்களில் திருமுறைவிழா சமயச் சொற்பொழிவுகள் இன்னிசை நிகழ்ச்சிகள், கதாகாலக்ஷேபம், நாட்டிய நாடகம் முதலிய நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. அன்பர்கள் கண்டும் கேட்டும் உய்கின்றனர்.

## சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தில்

## பதினோராவது ஆண்டு விழா நிகழ்ச்சி

சென்னை தியாகராயநகரில் உள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில் பதினோராவது ஆண்டு நிறைவு விழா 20-12-64 மாலை தமிழக முதலமைச்சர் கனம் திரு, M, பக்தவத்சலம் B. A., B. L., அவர்கள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. முதலில் நிலையப் பிரார்த்தனைக் கூட்டத்தில் ஸ்ரீசெல்வமுத்துக்குமாரசுவாமிக்கும், ஸ்ரீகயிலாயநாதருக்கும் சிறப்பு வழிபாடு நிகழ்த்தப்பெற்றன, ஸ்ரீமத், சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அனைவரையும் வரவேற்று நிலையம் ஆற்றிவரும் பணிகளை விளக்கினார்கள். தருமபுரம், திரு. பி. சுவாமிநாதன் கடவுள் வணக்கம் பாடினார், நிலையத் திருமுறை

வகுப்புக் குழந்தைகள் சமயச் சிறப்புப்பற்றியும் நிலையப்பணி குறித்தும் ஓர் உரையாடல் நிகழ்த்தினர். பைந்தமிழ்ச்செல்வர் திரு. ச. சிவகுமாரன் சமயவழிபாடு மக்களுக்கு இன்றியமையாதது என்று விளக்கிப்பேசினுர்கள். தமிழக முதலமைச்சர் கனம், எம். பக்தவத்சலம் அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினுர்கள். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கும்போது ஐந்தாண்டுகட்கு முன்பு இருந்ததைவிட மக்களிடையே சமய ஆர்வம் பெருகியுள்ளது என்றும், கிறித்தவர் களைப்போல் கட்டுப்பாடாக ஒரு இயக்கம் நம்மிடம் இல்லாதது தான் குறையாக உள்ளது என்றும், மதமாற்றம் செய்வது தவறு என்றும், அவரவர்கள் அவர்அவர்கள் சமயநெறிப்படி நடப்பதே வேத ஆகம சம்மதம் என்றும். எல்லா சமயங்களையும் பற்றித் தெரிந்து கொள்வதால் தவறில்லை என்றும், ஆர்வம் மட்டும் இருந்தால் போதாது செயலுக்குக் கொண்டு வரவேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள். தருமபுரம் திரு. P. சுவாமிநாதன் கடவுள் வாழ்த்துப் பாடினுர்.

## சோழநாட்டுத் தலயாத்திரை

சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலைய வழிபாட்டுக் குழுவினர் 25—12—64 முதல் 31—12—64 முடிய சோழநாட்டில் காவிரியின் வடகரையில் உள்ள அறுபத்து மூன்று பாடல்பெற்ற தலங்களுள் மேற்குப் பகுதித் தலங்கள் இருபத்தெட்டையும், மற்றும் வரலாற்றுச் சிறப்புள்ள சில தலங் களையும் வழிபட்டு சமயப் பிரசாரம் நிகழ்த்தினர். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் ஆதீன ஆட்சி யில் உள்ள திருக்கோயில்களில் வழிபாட்டிற்கும், சமயப் பிரசாரத் திற்கும், உண்டி உறையுளுக்கும் தக்க ஏற்பாடு செய்வித்தருளி ஞர்கள். திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் அருளாணையின் வண்ணம் ஸ்ரீ காசிமடத்து இளவரசு வித்துவான். ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள், திருப்பனந்தாள் வழிபாட்டிற்கும். சமயப்பிரசாரத்திற்கும், உண்டி உறையுளுக்கும் தக்க ஏற்பாடு செய்வித்தருளினுர்கள். சென்னை மாநில இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர், திரு. M. S. சாரங்க பாணி முதலியார், பி. ஏ., பி. எல். அவர்கள் யாத்திரை செல்லும் தலங்கட்கெல்லாம் சுற்றறிக்கை விடுத்து வழிபாடும், சமயப் பிரசாரமும் சிறக்க ஏற்பாடு செய்து உதவினுர்கள். சென்னை, உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு. டி. கே. சுப்பிரமணிய பிள்ளை

பி. ஏ., பி. எல். அவர்கள் 25—12—64 விடியற்காலை வழிபாட்டுக் குழுவினரை வாழ்த்துரை கூறி வழியனுப்பிவைத்தார்கள். "சோழநாட்டுக் காவிரி வடகரை மேற்குப் பகுதித் தலங்கள்" என்ற புத்தகம் நிலைய அன்பர்களான மேயர்கம்பனி திரு. ஆர், மாசிலாமணி முதலியார், திரு. K. C. நாகலிங்க முதலியார் திரு. K. கமலக்கண்ணன், எம். எல். சி. ஆகியவர்களால் அன்பளிப்பாக வெளியிடப்பெற்றது.

25—12—64ல் சிதம்பரம், திருநாரையூர், திருஓமாம்புலியூர், காட்டுமன்னார்கோயில், உடையார்குடிக்கோயில் ஆகிய கோயில் களில் வழிபாடும், சமயப்பிரசாரமும் சிறப்பாக நடைபெற்றன. சிதம்பரத்தில் திரு. ஆனந்தநடேச தீக்ஷிதர், திரு. N. M. பொன்னம்பலம்பிள்ளை திரு. ச. சேதுசுப்பிரமணிய பிள்ளை முதலியோர் குழுவினரை வரவேற்று வழிபாட்டைச் சிறப்பாக நடத்திக் கொடுத்தனர். திருநாரையூரில் திரு. கோவிந்தராச பிள்ளை அவர்களும், மேற்படி கோயில் அறங்காவலரும், சீகாழி திரு. சொ. சீநிவாச முதலியார் அவர்களும் குழுவினரை வர வேற்று வழிபாட்டையும், பிரசாரத்தையும் சிறப்புற நடத்திவைத் தார்கள். திரு. கோவிந்தராச பிள்ளை அவர்கள் குழுவினருக்கு மாகேஸ்வரபூசை செய்து உபசரித்தார்கள். ஓமாம்புலியூர், காட்டுமன்னார்கோயில், உடையார்குடி ஆகிய தலங்களில் காட்டுமன்னார்குடி நாட்டுச்சின்னபண்ணை திரு. M. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் தக்க ஏற்பாடு செய்து உதவினார்கள்.

ஸ்ரீ மங்கையர்க்கரசியார் வார வழிபாட்டுக் கழகத்தினரும், ஸ்ரீ சேக்கிழார் வார வழிபாட்டுக் கழகத்தினரும் வழிபாட்டையும், பிரசாரத்தையும் சிறப்பாக நடத்த உதவினார்கள்.

26—12—64 இல் திருக்கானாட்டுமுள்ளூர், திருக்கடம்பூர், திருப்பனந்தாள், திரைலோக்கி, திருச்சேய்ஞலூர், திருவாப்பாடி ஆகிய தலங்களில் வழிபாடும், சமயப் பிரசாரமும் நிகழ்ந்தன. கானாட்டுமுள்ளூரில் காட்டுமன்னார்குடி நாட்டுச் சின்னபண்ணை திரு. M. இராமலிங்கம் பிள்ளை அவர்களும், திரு. ஞானதேசிகம் பிள்ளை அவர்களும் தக்க ஏற்பாடு செய்து நடத்திவைத்தனர். கடம்பூரில் மேற்படி ஆலய அறங்காவலர்கள் வரவேற்று உபசரித் தனர். திரைலோக்கியில் திரு. முருகேசம் பிள்ளை அவர்களும், திருச்சேய்ஞலூரில் அறங்காவலர்களும், திருவாய்ப்பாடியில் அறங்காவலர் திரு. S. சங்கர அய்யர் அவர்களும், திருப்பனந் தாளில் ஆலயக் காரியஸ்தர்களும், ஸ்ரீகாசி மடத்து காரியஸ்தர் களும் ஆணைவழி வரவேற்று உபசரித்தார்கள்.

27—12—64ல் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம், சூரியனுர் கோயில். திருமங்கலக்குடி, திருமாந்துறை, திருக்கோடிகா, திருக் கஞ்சனூர், திருபுவனம். ஆகியதலங்களில் வழிபாடும் சமயப் பிரசாரமும் நிகழ்ந்தன. அவ்வவ்வாலய அறங்காவலர்களும் தொண்டர்களும். அதிகாரிகளும், வரவேற்று உபசரித்தனர். ஆடுதுறை அப்பர் அருள் நெறிக்கழகச் செயலாளர், திரு. வைத்தியலிங்கம் செட்டியாரவர்களும், திரு. கோவிந்தசாமி செட்டியார், திரு. N. K. சொக்கலிங்கம் செட்டியாரவர்களும் வழிபாட்டிற்கு உதவியதுடன் மாகேஸ்வரபூசையும் செய்து உபசரித்தனர்.

28—12—64ல் திருந்துதேவன்குடி. திருவியலூர், திருக் கொட்டையூர், திருஇன்னம்பர், திருப்புறம்பயம், சுவாமிமலை, திருவையாறு, ஆகிய தலங்களில் வழிபாடும், சமயப்பிரசாரமும் நடைபெற்றன. ஷை ஆலய அறங்காவலர்களும், தொண்டர் களும் வரவேற்றுச் சிறப்பித்தனர். திருப்பனந்தாள் திரு. T.M. சடையப்பிள்ளை யவர்கள் உடன் வந்து உபசரித்தார்கள். திருவையாற்றில் ஐயாறப்பர் வாரவழிபாட்டுக் கழகத்தினர் வரவேற்று உபசரித்தனர்.

29—12—64ல் திங்களூர், திருப்பழனம், வடகுரங்காடுதுறை திருப்பெரும்புலியூர். திருநெய்த்தானம், திருவானைக்கா, ஆகிய தலங்களில் வழிபாடும் சமயப்பிரசாரமும் நடைபெற்றன. திருப் பழனம் ஆபத்சகாயம் ஐயர், திரு. சுவர்ணகாளீச்சுரன், திரு. கோவிந்தசாமிமூப்பனுர், முதலியோர் உடனிருந்தும்வரவேற்றும் உபசரித்தனர். அவ்வவ்வாலய அறங்காவலர்களும், அதிகாரி களும் வரவேற்று உபசரித்தனர்.

30—12—64ல் திருவரங்கம், திருத்தவத்துறை. திரு. அன்பில் ஆலந்துறை, திருமாந்துறை, திருப்பாற்றுறை, திருப்பைஞ்ஞீலி. திருப்பாச்சிலாச்சிராமம், ஆகிய தலங்களில் வழிபாடும், சமயப் பிரசாரமும் நடைபெற்றன. அவ்வத்தல அறங்காவலர்களும், அதிகாரிகளும் குழுவினரைவரவேற்று உபசரித்தனர். திருத்தவத் துறையில் திரு. G. கனகசபைபிள்ளை யவர்களும், திருப்பைஞ்ஞீலி யில் கோவத்தகுடி திரு. தாண்டவராய பிள்ளை அவர்களும் வரவேற்று உபசரித்தனர். அன்று மதியம், கூடப்பள்ளி எஸ்டேட் திருமதி, செல்லமணியம்மையாரவர்கள் குழுவினருக்கு மாகேஸ்வர பூசைசெய்து உபசரித்தனர். ஷை எஸ்டேட் ஏஜெண்ட் திரு. M. சிவகுருநாத பிள்ளை யவர்களும், எஸ்டேட் ஸ்விகாரப்புத்திரர்

திரு. பொன்னுமணியவர்களும் குழுவினரை வரவேற்று உபசரித்தனர்.

31—12—64ல் பூவாளூர்ச் சிவன்கோயில், திருமழபாடி. திருப்பழுவூர், கலியபெருமாள்கோயில், திருவாமூர் ஆகிய தலங்களில் வழிபாடும், சமயப்பிரசாரமும் நடைபெற்றன. அவ்வத் தலங்களிலும் ஆலய அறங்காவலர்களும், அதிகாரிகளும் வரவேற்று வழிபாட்டையும், சமயப் பிரசாரத்தையும் நன்கு நடத்தி உதவினர். இன்று மதியம், அரியலூரில் மணிவாசக மன்றத்தினர் குழுவினரை வரவேற்று மாகேஸ்வர பூசைசெய்து உபசரித்தனர். செயலாளர், திரு. மு. வரதராஜ பிள்ளை, புலவர், திரு. அ. நடேச முதலியார் முதலியோர் குழுவினரை வரவேற்று உபசரித்தனர். திருவாமூரில் வீரப்பெருமாநல்லூர், திரு. கிருஷ்ணமூர்த்தி ரெட்டியார் குழுவினருக்குச் சிற்றுண்டி அளித்து உபசரித்தார். திருவாமூர் ஸ்ரீ திருநாவுக்கரசு நாயனூர் கோயிலுக்கு வெள்ளியில் அஞ்சடுக்கு அலங்கார தீபம்செய்து கொடுப்பதாகவும், திங்களூரில் அப்பர் அப்பூதியடிகள் விமானம் செய்ய ரூ. 101ம் கொடுப்பதாகவும் குழுவினர் அறிவித்தனர். வழிபாட்டிற்கும், சமயப் பிரசாரத்திற்கும், உண்டி உறையுளுக்கும் தக்க ஏற்பாடு செய்த பெருமக்கள் அனைவருக்கும் ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் நன்றி தெரிவித்தார்கள்.

## வைத்தீஸ்வரன்கோயில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

வைத்தீஸ்வரன்கோயிலில் 17—12—64 வியாழக்கிழமை கிருத்திகையன்று நிலைய அன்பர்கள் சார்பில் நிகழ்த்திய அபிஷேக அர்ச்சனைப் பிரசாதம் 18—12—64 மாலை 7 மணிக்கு நிலைய மன்றத்தில் திரு. K. கமலக்கண்ணன் M. L. C. அவர்கள் தலைமையில் வேளூர்த் தேவாரம், திருப்புகழ் பிரார்த்தனை நிகழ்த்தி உறுப்பினர்கட்கும், அன்பர்கட்கும் வழங்கப்பட்டது. திரு. P. சுவாமிநாதன் பிரார்த்தனை நிகழ்த்தினுர். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினுர்கள்.

13—1—65 கிருத்திகையன்று வேளூரில் நடைபெற்ற கிருத்திகை அபிஷேக அர்ச்சனைப் பிரசாதம் 14—1—65 பொங்கலன்று

திரு. V. இரத்தின முதலியார் பி.ஏ., பி. எல்., அவர் கள் தலைமையில் பிரார்த்தனை நிகழ்த்தி வழங்கப்பெற்றது. திரு. P. சுவாமிநாதன் பிரார்த்தனை புரிந்தார். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் வாழ்த்துரையும் கூறினர்கள்.

9—2—65 கிருத்திகையன்று வேலூரில் நிகழ்த்திய அபிஷேக அர்ச்சனைப் பிரசாதம் 10—2...65 மாலை 7 மணிக்கு நிலைய மன்றத்தில் திரு. K. E. அருணசல முதலியார் M. A. B. Com. அவர்கள் தலைமையில் பிரார்த்தனை நிகழ்த்தி வழங்கப்பட்டது. திரு. P. சுவாமிநாதன் பிரார்த்தனை நிகழ்த்தினர். அன்பர்களும் உறுப்பினர்களும் பிரசாதம் பெற்றுச் சென்றனர்.

## தித்திக்கும் திருநாமம்

திரு U. R. உமாநாத தீட்சதர் அவர்கள்

ராகமாலிகை

பல்லவி

தித்திக்கும் திருநாமம் திருமுருகா எனும் நாமம்
பத்திசெய் வார்க்கெல்லாம் அருள்பாலிக்கும் ஒருநாமம் (தித்தி)

அனுபல்லவி

உள்ளத்திலே புதுமை உணர்ச்சியை எழுப்பிடும்
வெள்ளமதாய் இன்ப ஊற்றினைப் பெருக்கிடும் (தித்தி)

சரணம்

முந்தை வினையறுத்து மூலப் பொருள் உரைக்கும்
தந்தை தாய் சுற்றம் தானே யாகிடும்
விந்தைகள் செய்திடும் வேதனை தகர்த்திடும்
சிந்தையைக் கவர்ந்திடும் செந்தேன் ஒழுகிடும். (தித்தி

திருக்கயிலாயபரம்பரைத்

தருமையாதீனத்துக்குச் சொந்தமான வைத்தீசுவரன்கோயில்



ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமியை

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் தரிசித்தல்

# எதிர்காலம் - திரு. கே. முத்துஜோதிடர்

( குரோதிஞு பங்குனிமீ 1௨ முதல் 30௨ முடிய )

(14—3—65 முதல் 12—4—65 முடிய)

•

## 1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை $\frac{1}{4}$

மேஷராசி 9 பாதங்களும் சுபத்தைத் தரும். இல்லற சுகம் உண்டுபண்ணும். ஜீவன லாபம் ஓங்கும். மேலோர் பெரியோர் அன்பு கிடைக்கும். அடிக்கடி சஞ்சார பலனைத் தரும். சுப சோபனதிகள் ஏற்படச் செய்யும். மனம் சாந்தியடையும். இல்லறம் அமைதியாய் நடக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

## 2. ரிஷபம். கார்த்திகை $\frac{3}{4}$ - ரோஹிணி - மிருகசீரிஷம் $\frac{1}{2}$

கார்த்திகை 2, 3, 4 பாதங்களும். ரோகிணி நான்கு பாதங் களும் சௌக்கியத்தைத் தரும். அசாத்தியமெல்லாம் சுலப சாத்திய மாகும். பரோபகாரத்தினுல் கீர்த்தியை உண்டுபண் ணும். ஆரோக்கியம் உண்டாகும். தெய்வபலம் முன்னிற்கும். மிருகசீரிஷம் 1, 2 பாதங்கள் மிச்ர பலனைத் தரும். வரவுக்கு மிஞ்சின செலவும், ஆரோக்கியக் குறைவும் காட்டும். சனி, செவ்வாய் சுபமாகும்.

## 3. மிதுனம். மிருகசீரிஷம் $\frac{1}{2}$ - திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$

மிதுன ராசி 9 பாதங்களும் இல்லற சுகத்தைப் பூர்ணமாகத் தந்து இடம் மாறி சுகம் உண்டுபண்ணும். கீர்த்தி பத்திரம் கிடைக்கச் செய்யும். வித்தியா விருத்தியாகும். நன்மதிப்பு ஏற்படச் செய்யும். திங்கள், புதன் சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

புனர்பூசம் 4 ஆம் பாதம் வித்தியா விருத்தியாகி தெய்வபலம் முன்னின்று சகலத்தையும் காக்கும். பூசம் நான்கு பாதங்களும் மிச்ரபலன்களைத் தரும். ஆரோக்கியக் குறைவைத் தரும். எதிர் பாராத நஷ்டங்களையும் உண்டுபண்ணும். ஆயில்யம் நான்கு பாதங்களும் சகல சிரமங்களையும் நிவர்த்தி செய்து உலகில் நன் மதிப்பை உண்டுபண்ணும். அசாத்தியமெல்லாம் சுலப சாத்திய மாகும். தன தான்ய விருத்தியும், சுபமான விரயங்களும் தரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் சுபமாகவே நடக்கும். விவாகாதி சுபங்களைக் கொடுக்கும். தொழில் ஓங்கும். உத்தியோக விருத்தி யாகும். ஆரோக்கியம் உண்டுபண்ணும். எல்லோரிடத்திலும் நன்மதிப்பை உண்டுபண்ணும். சனி, ஞாயிறு சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் நித்தியமங்களத்தைத் தரும். தெய்வ பலம் முன்னின்றுகொண்டு சகலத்தையும் காக்கும். இராஜாங்கமைத்திரமும், மேலோர் பெரியோர்களுடைய சேர்க் கையும் அடிக்கடி ஏற்படச் செய்யும். ஆரோக்கியம் உண்டாகும்.. இல்லற சுகம் ஓங்கும். தானதான்யம் விருத்தியாகும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் கிரயவிக்கிரயமூலம் சுபமுண்டாகும். திங்கள், புதன் சுபமாகும்.

7. துலாம். சித்திரை ½, - சுவாதி - விசாகம் ¾.

துலாராசி 9 பாதங்களும் எதிர்பாராத லாபங்களைத் தரும். இல்லறம் ஓங்கும். ஆரோக்கியம் உண்டாகும். புத்திராதிகளால் மேன்மை யையும் கீர்த்தியையும் உண்டுபண்ணும். உலக பிரசித் தியையும் தரும். சனி, ஞாயிறு சுபமாகும்.

8. விருச்சிகம். வீசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் வரவு செலவு சமனுகும். தொல்லைகள் ஜாஸ்தியாகும். அடிக்கடி சுபவிரயங்களும், சஞ்சார பலன்களும் ஓங்கும். வித்தியாவிருத்தியும் உத்தியோக விருத்தியும் ஏற்படும். மனம் சாந்தியடையும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்ரபலனையே தரும். வரவு செலவு சமனுகும். வீண் அலைச்சல்களும், அனுவசிய தொல்லைகளும் ஓங்கும். இல்லறத்தில் பல தோற்றங்களையும் உண்டு பண்ணும். ஆனலும், ஜீவன லாபத்தைத் தரும். வெள்ளி, சனி சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் அசாத்தியமெல்லாம் சுலபமாய் நடக்கும். இல்லற சுகம் ஓங்கும். ஆரோக்கியத்தைத் தரும். உத்தியோகத்தில் எதிர்பாராத ஏற்றத்தைத் தரும். நல்ல கீர்த்தி பத்திரமும் கிடைக்கும். மனம் சந்தோஷம் அடையும். திங்கள், புதன் சுபமாகும்.

11. கும்பம் - அவிட்டம் ½. சதயம் - பூரட்டாதி ¾.

கும்பராசி 9 பாதங்களும் தீராத வியாதியினின்றும் தீர்த்து வைத்து ஆரோக்கியத்தைத் தரும். புத்திராதிகளால் பூர்ண சுகம் உண்டாகும். அடிக்கடி சுப காரியங்களும், சஞ்சார பலனும் உண்டாகும். வியவகாரம் ஜெயிக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

## 12. மீனம். பூரட்டாதி ¼ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் தெய்வபலத்தால் பிரகாசிக்கச் செய்யும். உத்தியோக உயர்வும், இல்லற சுகமும் ஓங்கும். தொழில் மூலம் லாபம் உண்டுபண்ணும். சுபகரமான சஞ்சாரங் கள் அடிக்கடி உண்டாகும். தெய்வபலம் பிரகாசிக்கச் செய்யும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

குறிப்பு :- மேற்படி மாதம் சாந்திர தெலுங்கு வருஷ பிறப்பு, உதயகால சந்தியில் ஏற்பட்டும், குரு விருஷபராசியில் அதிகார மாக வந்து இராகுவோடு சேர்ந்தும் அடிக்கடி குருவுக்கு வக்ராஸ்தமனங்களும் தொடர்ந்துகொண்டே இருப்பதாலும். செவ்வாய் சிம்ம ராசியில் வக்ரத்தில் ஸ்தம்ப கதியை அடைந்து சனியால் பார்க்கப்பட்டும், சனி செவ்வாய் ஒருவருக்கொருவர் பார்த்துக்கொண்டும் கிரகநிலை ஏற்படுகிறபடியால் உலகில் உள்ள மகான்களும் பெரியோர்களும் புண்ணியவான்களும் தனவான்களும் ரொம்பவும் தயவுகூர்ந்து உலக க்ஷேமத்தின் பொருட்டு, உலகில் அமைதிக்கு எந்தவித ஆபத்துக்களும் அணு காமல் இராஜாங்கத்துடன் ஒத்துழைத்துக்கொண்டு சகலவித மான துன்பங்களையும் அணுகவிடாமல் தடுக்கச்செய்ய தெய்வ சக்தியை பிரதானமாய்க்கொண்டு முன் மாதங்களில் எழுதிக் கொண்டு வந்ததை கவனத்தில் வைத்துக்கொண்டு பாடுபட, கடவுள் அருளும் சேர்ந்து சகல பயமும் நீங்கி, சகல க்ஷேமங் களும் மங்களமும் உண்டாகும். சுபம்.

## தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி மாணவிக்குப் பரிசு

சென்னை, நக்கீரர் கழகம் சிறந்த முறையில் தமிழ்ப் பணி செய்துவருகிறது. அக்கழகத்தில் சொல்லின் செல்வர், டாக்டர். R. P. சேதுப்பிள்ளை அவர்கள் நினைவாகக் கட்டுரை, கவிதைப் போட்டிகள் நடத்தி அதில் வெற்றி பெற்ற கல்லூரி மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கிவருகின்ரூர்கள். அம்முறையில் இவ்வாண்டும் கவிதை கட்டுரைப் போட்டிகள் நிகழ்த்தப்பட்டன. அப்போட்டியில் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரியில் வித்துவான் முதலாண்டில் பயின்றுவரும் குமாரி. ப. விஜயலக்ஷ்மி கவிதைப்போட்டியில் கலந்துகொண்டு முதற்பரிசாக வெள்ளிக்குவளை பெற்று உள்ளார்.


## "ஞானசம்பந்தம்"

### கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் இதழ்

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து வெளிவருவது. சமய உண்மைப்பொருள் முதலியவற்றைக் குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந் துணையானது. கையொப்பத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**ஆண்டுக் கையொப்பம்**

உள்நாடு ரூ. 2—25 வெளிநாடு ரூ. 3—00

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்,
தருமையாதீனம், மாயூரம் அஞ்சல்,
தஞ்சை மாவட்டம்.

உ

குருபாதம்

# தருமையாதீனம் திருஞானசம்பந்தர் ஆலயம்

## திருநெல்வேலி சந்திப்பு.

ஞாயிறுதோறும் சொற்பொழிவு மாலை 6-30 மணி

14—3—65 கணநாத நாயனார்
— திரு. வ. ச. நடராசபிள்ளை
ஸ்ரீகாசி விருத்தகாளேச்சுரர் திருவருட்பா
— திரு. ம. சிவசம்பு

21—3—65 காரைக்கால் அம்மையார்
— திரு. வ. ச. நடராசபிள்ளை
ஸ்ரீகாசி காலவைரவர் திருவருட்பா
— திரு. ம. சிவசம்பு

28—3—65 தண்டியடிகள் நாயனார்
— திரு. வ. ச. நடராசபிள்ளை
ஸ்ரீகாசி அன்னபூரணியம்மை திருவருட்பா
— திரு. ம. சிவசம்பு

4—4—65 நேச நாயனார்
— திரு. வ. ச. நடராசபிள்ளை
ஸ்ரீகேதார கௌரியம்மை திருவருட்பா
— திரு. ம. சிவசம்பு

11—4—65 முனையடுவார் நாயனார்
— திரு. வ. ச. நடராசபிள்ளை
ஸ்ரீகாசி பாகீரதியம்மை திருவருட்பா
— திரு. ம. சிவசம்பு

நெல்லை அருணகிரி இசைக் கழகம், } இராம. கனகசபாபதி,
அமைச்சர்.

rinted & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam press, Dharmapuram (Mayuram) 10-3-65